
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62:10**


**Translated from**
**BS#950**
**Sep-Oct 2025**


**பொருளடக்கம்**


✡ தவித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்குமான விடுதலை ......... 2

✡ இயேசு மற்றும் அவருடைய ஜனங்களுடன் உள்ள ஐக்கியத்தின் நம்பிக்கை..................................... 9

✡ வேதாகமத்தைப் புரிந்து கொள்வது எப்படி ............................ 13



BS Tamil Version - 95

2025

# தவித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்குமான விடுதலை

Deliverance for the Groaning Ones

**ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம். – ரோமர் 8:22,23.**

நாம் நம்முடைய அன்றாட செயல்பாடுகளில், விருப்பமில்லாத சத்தம் மற்றும் சில சமயங்களில் மிகவும் சத்தமாக வாசிக்கப்படும் இசை, பெரும் சத்தம் எழுப்பும் ஒலி அமைப்பு கொண்ட ஒரு காருக்கு அருகில் அமர்ந்திருக்கையில், அது நம்முடைய கார் மீது அதிர்வை ஏற்படுத்தும் நிலைமைகளின் கீழ் இருந்திருப்போம். அத்துடன்கூட, நாம் சிரிப்பொலிகளை கேட்பதுடன், சந்தோஷமாயிருப்பதாகத் தோன்றும் ஜனக்கூட்டம், பொழுதுபோக்கு இடங்களுக்கு செல்வதையும் கவனிக்கிறோம். இதனால், பெரும்பாலான சிருஷ்டிகள் பெரிதாக புலம்பித்தவிக்காத வகையில் இருப்பதாக கூறும்படியாக முதலில் நமக்குத் தோன்றலாம். ஆனால் அவ்வப்பொழுது நம்முடைய கவனத்துக்கு வருகிற உண்மைகளை மிக அதிக நெருக்கமாகப் பார்த்தால், அதிக அளவிலான அந்த சிரிப்பானது, கட்டாயப் படுத்தப்பட்டவையாகவும், மன அழுத்தத்தை விடுவிப்பதற்காகவும், கண்ணீரை மறைக்கவும் செய்யப்படுகின்றன என்றும், பெருமளவிலான இசை மற்றவர்களை மகிழ்விக்கவும் உற்சாகமூட்டவுமே வணிக நோக்கில் செய்யப்படுகின்றது என்றும், அத்துடன் அந்த பொழுதுபோக்கு அநேகந்தரம் கவனத்தைத் திருப்பி மூழ்கடிக்கும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது என்பதையும் கண்டு கொள்கிறோம்.

மிக பெரும்பாலான ஜனங்கள் பொழுதுபோக்கு இடங்களுக்குச் செல்வது, ஏற்கனவே அவர்கள் போதுமான அளவுக்கு சந்தோஷமாயிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் அல்ல. ஆனால், அவர்கள் வருத்தமாயிருப்பதாலோ அல்லது சந்தோஷமாயிருக்க விரும்புகிற காரணத்தாலோதான் செல்கிறார்கள். குறிப்பிடத்தக்க அளவில் ஆவியில் புலம்புகிறவர்கள், மந்தமான அக்கறை, ஏமாற்றங்கள் மற்றும் இருதய வலிகளிலிருந்து எப்போதுமே மாற்றுப் பாதைகளையே தேடுகிறார்கள். ஜனங்களின் வாழ்க்கை அனுபவங்கள் பொதுவாக, சிறுபிள்ளைப் பிராயமே வாழ்வின் மகிழ்ச்சி நிறைந்த தருணம் என்று அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்கிறது; மேலும், அறிவில் வளர்வதினாலும், பொறுப்புணர்வு அக்கறைகளை கொண்டு வருவதினாலும், ஏமாற்றங்கள், இருதய வலிகள் வருவதுடன் பொதுவாக உலக மனுக்குலத்தாருக்குப் பிற பிரச்சனை நிறைந்த அனுபவங்கள் ஏற்படுகின்றன என நாம் நம்புகின்றோம். அநேகர், உணர்வின் அடிப்படையிலான சந்தோஷத்தைத் தேடி தற்காலிகமான சந்தோஷத்தை மட்டுமே கொண்டு வருகிற ஒழுக்கமற்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள்.




வேதாகமத்துக்குள் பார்க்கும் போது, தேவ தூதர்களைப் பற்றியும், பரலோக சந்தோஷங்களைப் பற்றியும் நமக்கு சொல்லப்பட்டுள்ள தகவல் என்னவெனில், துயரமோ, கண்ணீரோ, மரணமோ அங்கே பிரவேசிப்பதில்லை என்று நாம் புரிந்துக்கொள்ளும்படி கொடுக்கப்பட்டுள்ளது. அப்படியானால், மனுஷனை சிருஷ்டித்த அதே தேவன் தூதர் சேனைகளை சிருஷ்டிக்கவில்லையா? பின்பு ஏன், பூமியில் உள்ள நிலைமைகளுக்கும், பரத்திலுள்ளதற்கும் இடையே மிகப் பரந்த அளவிலான வேறுபாடும், மிகப் பரந்த ஒரு வித்தியாசமும் இருக்க வேண்டும்? நம்முடைய மீட்பர், தேவனுடைய ராஜ்யம் பூமிக்கு வருவதாக என்றும், அவருடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக என்றும் ஏன் ஜெபிக்கக் கற்றுத் தர வேண்டும்? உயிர்த்தெழுதலில் உண்மைத்துவமுள்ளவர்கள் தேவ தூதர்களைப் போல் இருப்பார்கள் என்றும், அவர்கள் இனி ஒருபோதும் மரிப்பதில்லை என்றும், அவர் நமக்கு ஏன் சொன்னார்? (லூக்கா 20:34-36). நாம் ஏன் தேவ தூதர்களைப் போல் இருக்கவில்லை? ஏன் நாம் மரிக்கிறோம்? ஏன் நாம் நோய்வாய்ப்படுகின்றோம்? ஏன் நாம் நம்முடைய மனம், சன்மார்க்கம், மதம் சம்பந்தமானவற்றிலும் மற்றும் சரீர வல்லமைகளிலும் அபூரணராயிருக்கிறோம்? நம்முடைய சரீர பெலத்தில் நாம் ஏன் குறைவுபட்டிருக்கிறோம்? என்று நாம் கேட்கலாம். இந்த கேள்விகளுக்குப் பதில் அளிக்க மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஞானம் தேவைப்படுகிறது. அதற்கு நல்ல காரணங்கள் இருக்க வேண்டும்; இல்லையெனில் அதே நீதியும், அன்பும், கிருபையும் நிறைந்த தேவன் தம்முடைய மானிட பிள்ளைகளை,

COURTESY BY :
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

தம்முடைய ஆவிக்குரிய பிள்ளைகளைப் போலவே, அன்போடும், தாராள குணத்தோடும் நடத்தியிருக்க வேண்டும். ஏன் நம்முடைய ஆசீர்வாதங்கள் எல்லாம் நம்பிக்கைக்குரியவையாகவும், அதே சமயம் தேவதூதர்களுடைய ஆசீர்வாதங்கள் எல்லாம் உண்மையாகவும், பெற்றிருக்கும் காரியமாகவும் உள்ளது?

இன்னும் கூட தகவல்களைத் தேடும்போது, நாங்கள் மனிதனுடைய நிலைமையைக் குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்றும், ஏன் அது அப்படி இருக்கிறது என்றும், அது எப்படி வந்தது என்றும் கேட்கிறோம். தேவன் "**கட்டுண்டவர்களின் பெருமூச்சைக் கேட்கவும், கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை விடுதலையாக்கவும், தம்முடைய உயர்ந்த பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பார்த்து, வானங்களிலிருந்து பூமியின் மேல் கண்ணோக்கமானார்**" என்ற தீர்க்கதரிசன அறிவிப்பை நாம் கவனிக்கிறோம். (சங் 102:19,20). இது அப்போஸ்தனுடைய வார்த்தைகளுடன் முழுமையாக ஒத்துப்போவதுடன், அந்த புலம்பித் தவிப்பதற்கான காரணம், மனுஷன் சிறைப்பட்டவனாகவும், மரண ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டவனாகவும் இருக்கிறான் என்பதே ஆகும் என்று மேலும் விளக்கத்தைக் கூட்டித் தருகிறது. ஆனால் எப்போது அவன் சிறை கைதியானான்? எப்போது அவன் மேல் மரண ஆக்கினைத் தீர்ப்பு வந்தது?

நம்முடைய சந்ததி பாவத்தின் கீழாக விற்கப்பட்டு - பாவத்துக்கு அடிமைகளாகிவிட்டதுடன் - துக்கம், சீர்கேடு, அபூரணம் மற்றும் மரணம் யாவும் பாவமாகிய இந்த மாபெரும் மேற்பார்வையாளரின் சம்பளத்தின் பங்குகளாயிருக்கின்றன என்று வேதவாக்கியங்கள் பதிலளிக்கின்றன. "**பாவத்தின் சம்பளம் மரணம்**" என்று அப்போஸ்தலன் அறிவிக்கிறார். அவர் பாவத்திற்கும், மரணத்திற்கும் மனித உருவங்கொடுத்து, பொதுவாக மனுபுத்திரர்களை இப்போது ஆள்கிற மாபெரும் மன்னர்களாக அவைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். பாவமும், மரணமும் இப்பொழுது ஆளுகை செய்து வருகிறது என்றும், உண்மையாகவே சொல்லப்போனால், மொத்த மனுக்குலமும் இந்த மன்னர்களுக்கு கீழ்ப்பட்டுதான் இருக்கின்றது என்று அறிவிக்கிறார். (ரோமர் 6:23; 5:14,21). நல்லவரும், பொல்லாதவருமாகிய இருவரும் போகக்கூடிய பிரேதக்குழி மிகப்பெரிய சிறைவீடாக இருக்கிறது, அங்கே அனைவரும் உருவகமாக நித்திரை செய்வதாக வர்ணிக்கப்படுகிறது. அது மரணத்தின் மீது அதிகாரம் பெற்ற சாத்தானை, மேசியா தம்முடைய இரண்டாம் வருகையில் வந்திருக்கும் போது வெற்றி கொள்வதுடன், பாவத்தின் சங்கிலிகளிலிருந்தும், மரணம், ஷியோல், ஹாதேஸ், பிரேதக்குழியாகிய சிறை வீட்டிலிருந்து சிறைப்பட்டவர்களை விடுவிக்கப்போகிற அந்த ஆசீர்வாதமான ஆயிரம் வருட நாளின் காலைப் பொழுதுக்காகக் காத்திருக்கிறது.

மீட்பருடைய வார்த்தைகளைக் கவனியுங்கள்: "**மரித்தேன், ஆனாலும், இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்: நான் மரணத்திற்கும்** [ஆதாமின் சாகும் நடைமுறை], **பாதாளத்திற்குமுரிய** [ஹாதேஸ், பிரேதக்குழி] **திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.**" (வெளி. 1:18). அதே வரிசையில் மேசியாவையும், அவருடைய கிருபை




நிறைந்த ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, அதன் வேலையையும் குறித்துக் காட்டும் தீர்க்கதரிசன வாக்கியத்தை மீண்டும் கவனிக்கவும். "**நீர் குருடருடைய கண்களைத் திறக்கவும், கட்டுண்டவர்களைக் காவலிலிருந்தும், இருளில் இருக்கிறவர்களைச் சிறைச்சாலையிலிருந்தும் விடுவிக்கவும், கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப் பிடித்து, உம்மைத் தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்.**"(ஏசாயா 42:6,7). மீண்டும், "**கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்: சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்: இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்... என்னை அபிஷேகம் பண்ணினார்.**" (ஏசாயா 61:1).

நம்முடைய கர்த்தர் தனிப்பட்ட முறையில் ஏசாயா 61:1-லிருந்து எடுத்து பிரசங்கித்தார். லூக்கா 4:18-ல் கூட இருக்கிறது, அவர் தாமே இந்த தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றப் போகிறவர் என்று அவர் அறிவித்தார். இவரே நம்முடைய சந்ததியை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும், மரணத்தின் கட்டுப்பாட்டிலிருந்தும் விடுவிக்கிறவர். நாம் தெய்வீக அனுதாபத்தையும், பரலோக பிதாவினால் நமக்கு அருளப்பட்ட எல்லா நிலைமைகளுக்கும் போதுமானவரான ஒரு இரட்சகரையும் பெற்றிருக்கிறோம் என்பது தேவனுடைய வார்த்தையின் வாக்குறுதியாக இருக்கிறது; அதனால் உலகமானது அவர் செயல்படுவதற்கான சரியான நேரத்திற்காகவும், இந்த அடிமை விலங்குகள் உடைப்பட்டு சிறைக்கதவு திறக்கப்படவும், இந்த ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து சிறைப்பட்டவர்கள் யாவரும் விடுதலையாக்கப்படவும் காத்திருக்கிறது.

## எப்படி பாவத்துக்கு மனுஷனுடைய அடிமைத்தனம் தொடங்கியது

பாவம் மற்றும் மரண நிலைமைக்கு உள்ளாக்குகிற இந்த அடிமைத்தனத்தில், மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தினரையும் உட்படுத்தும் இந்த பொதுவான ஒரு விஷயம், மிகவும் குறிப்பிடத்தக்கது ஆகும். அதன் விளக்கத்திற்காக நாம் தேவனுடைய வார்த்தைக்கு கவனமாக செவி கொடுப்பது பலன்தரத்தக்கதாக இருக்கிறது. அப்போஸ்தலன், "**ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும்** [அதன் முடிவாக] **உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக் கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று**" என்று கூறி விளக்கம் கொடுக்கிறார். (ரோமர் 5:12). ஆதியாகமத்திற்கு திரும்பி பார்க்கையில், அப்போஸ்தலனுடைய வார்த்தைகள் ஆதாமின் சரித்திரத்தால் தாராளமாக ஆதரிக்கப்படுகிறது.

தேவனுக்குக் கீழ்ப்படிவதிலிருந்து அவன் விலகிச் செல்லுதல், தெய்வீக ஐக்கியத்தை அவன் புறக்கணித்தல் மற்றும் ஏதேனிலிருந்து அவன் வெளியேற்றப்பட்டது உட்பட இது போன்ற காரியங்களால் அவனுடைய கீழ்ப்படியாமை என்கிற அவனுடைய பாவத்தின் காரணமாக மரண நிலைமைகளுக்குள்ளாக கீழ்ப்படுத்தப்பட்டான். அங்கே தான் அடிமைத்தனம் ஆரம்பமாயிற்று; நம்முடைய மனுக்குலத்தாரின் புலம்பலும், மரணமும் அதன் துவக்கத்தைப் பெற்றுக் கொண்டது. சிருஷ்டிகரின் வார்த்தைகள், "**அது** (பூமி) **உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்... நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்... நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்.**" (ஆதி. 3:18,19).

மானிட தத்துவங்களுக்கும், இருண்ட யுகங்களின் புகையினால் தங்கள் பார்வையை மங்கலாகாமல் காத்துக் கொண்டவர்களுக்கு எதுவும் தெளிவாகவும், எளிமையாக-வும், புரிந்து கொள்ள சுலபமாகவும் இருக்கும். அந்த புலம்பல் தகப்பனாகிய ஆதாமில் தொடங்கி, இப்பொழுது வரைக்கும் தொடர்ந்து வந்திருக்கிறது. அவனுடைய சந்ததி ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டிருந்த தேவனுடைய ரூபம் மற்றும் சாயலின் பூரணத்தை அதிகமதிகமாக இழந்து விட்டதுடன், மனம், சன்மார்க்கம், மதம் மற்றும் சரீரப் பிரகாரமாகவும் அதிகமதிகமாக சீர்கெட்டு வந்திருக்கிறது என்பது அதிகத் தெளிவாகிறது – "**நீதிமான் ஒருவனுமில்லை, ஒருவனாகிலும் இல்லை**" – வார்த்தையிலோ அல்லது செயலிலோ ஒருவரும் பூரணர் இல்லை. (ரோமர் 3:10). அப்போஸ்தலன் சொல்கிறபடி நன்மை செய்ய வேண்டுமென்ற விருப்பம் நம்மிடம் இருக்கலாம். ஆனால் நாம் செய்ய விரும்புவதை எல்லாம் எப்படி செய்வோம் என்பது இன்னொரு விஷயம். மீண்டும் அவர், "**நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு**" என்று அறிவிக்கிறார். (கலா. 5:17). கஷ்டம் என்னவெனில் சாவுக்குரிய நிலைமைகள் நம்மை முழுமை-யாக நன்மை செய்யும் காரியங்களில் குறைவுள்ளவர்களாக்கிவிட்டதுடன், எதிராளியின் சோதனைகளை எதிர்த்து நிற்கும் விஷயத்திலும் பலவீனப்படுத்திவிட்டது.

இந்தப் பாடம் சம்பந்தமாக, எந்த மனுஷ ஊகக் கருத்தும் வேண்டியதில்லை, தேவ ஏவுதலால் கொடுக்கப்பட்டுள்ள விளக்கமே போதுமானது. வேதாகமம் நமக்கு முன்பாகக் கொண்டிருக்கிற இந்த நம்பிக்கையைக் குறித்து, அதாவது இந்த சிறைவீட்டின் அடிமைத்தனத்திலிருந்து நம்முடைய சந்ததி விடுதலையாக்கப்படும் என்ற நம்பிக்கை-யாகிய இந்த விளக்கத்துக்காக தேவனுக்கு நன்றி. நமது வேத பகுதியின் பின்னணிச் சூழல் இந்த உண்மைகளைக் கவனத்தில் கொண்டு (ரோமர் 8:20)-ல் குறிப்பிடுகிறது: "**அந்த சிருஷ்டியானது** [மனுக்குலம்] **சுயஇஷ்டத்தினாலே** [அதன் சொந்த சித்தத்தின்படி] **அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே** [யேகோவா தேவன்] **மாயைக்குக்** [குறை, அபூரணம், பலவீனம்] **கீழ்ப்பட்டிருக்கிறது** [ஆதாமின் மீறுதல் காரணமாக]." அப்படி இருப்பினும் மாயைக்கு இப்படி கீழ்ப்பட்டிருப்பது நம்பிக்கையில்லாமல் அல்ல, ஒரு நல்ல நம்பிக்கை, ஒரு மகத்தான நம்பிக்கை, ஆசீர்வாதமான நம்பிக்கை இருக்கிறது என்று நாம் வாசிக்கிறோம்; மேலும் இது வேதாகமத்தில் "வேதாகமத்தின் நம்பிக்கை" என்றழைக்கப்படுகிறது.

## வேதாகமத்தின் நம்பிக்கை

இன்னொருவரின் காரணமாக (தகப்பனாகிய ஆதாம்) சிருஷ்டியாகிய மனுக்குலமானது துக்கம், அபூரணம், மரணத்துக்கு கீழ்ப்பட்டதாக இருந்தாலும், அவன் நம்பிக்கையில்லாமல் இல்லை என்பதை அவ்வேத பகுதியின் பின்னணி அறிவிக்கிறதை நாம் கவனிக்கிறோம்; "**அதேனென்றால், சிருஷ்டியானது அழிவுக்குரிய** [மரணம்] **அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறது.**" (வசனம் 21). இது ஒரு குறிப்பிடத்தக்க அறிவிப்பாகும், ஏனெனில் இது சபையையோ, தெரிந்து கொள்ளப்பட்டவர்களையோ, சிறுமந்தையையோ சுட்டிக்காட்டாமல், சிருஷ்டியை அதாவது பொதுவான உலகத்தாரைச் சுட்டிக்காட்டுகிறது. ஆம், "**எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்**" என்பதே நம்முடைய இரட்சகருடைய பிறப்பைக் குறித்து தேவ தூதர்கள் அறிவித்த போது, பிரகடனப்படுத்தப்பட்டது ஆகும். (லூக்கா 2:10).

மேலும் வேத வாக்கியங்களில் பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகை ஏன் அனுமதிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பது பற்றிய தத்துவ விளக்கத்தை மட்டும் நமக்குக் கொடுக்காமல், கூடவே, எப்படி, எங்கே அவைகளின் ஆளுகையானது ரத்து செய்யப்பட்டு, மனுக்குலம் விடுதலை-யாக்கப்படும் என்பதையும் கொடுக்கிறது. ஆதாமின் பாவத்திற்கான தண்டனையை இயேசு அனுபவித்தார் என்று அந்த அறிக்கை கூறுகிறது: இது மரணத்துக்கேதுவான தெய்வீக ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து ஆதாமை விடுதலையாக்கு-வதை மட்டுமல்லாமல், அதோடுகூட, ஆதாமின் பாவத்தின் மூலமாக தெய்வீக ஆக்கினைத்தீர்ப்பின் கீழ் வந்த எல்லோரும் – அதாவது, புலம்பித் தவிக்கிற சிருஷ்டிகள் அனைவரும், அந்த தண்டனையிலிருந்து விடுதலை பெறுவார்கள். புலம்பித் தவிக்கிற சிருஷ்டிகளின் விடுதலையைப் பற்றி அனைத்து வேத வாக்கியங்களும் பேசும்போது, இந்த விடுதலையை, செயல்பாட்டில் கொண்டு வருவதில் தேவனுடைய பிரதிநிதியாக மேசியாவையே சுட்டிக் காட்டுகின்றன. நாங்கள் ஏற்கனவே இயேசு மற்றும் தீர்க்கதரிசிகளின் அறிக்கையை, அதாவது, அவர் சிறைக் கதவுகளைத் திறந்து சிறைப்பட்டவர்களை விடுவிப்பார் என்பதாக மேற்கோள் காட்டியிருக்கிறோம். எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் என்ற இந்த நற்செய்தி யைக் குறித்த விஷயத்தை – அதாவது, அபிஷேகிக்கப்பட்ட ஆண்டவராகிய மேசியாவாகிய இரட்சகர் பிறந்திருக்கிறார் என்று தேவ தூதர்கள் சொன்ன வார்த்தைகளை நினைவு கூருகிறோம். (லூக்கா 2:11). இவ்வாறாக வேத வாக்கியங்கள் முழுவதும், மனுக்குலமானது பாவத்திலிருந்தும், வீழ்ச்சியிலிருந்தும் விடுதலை பெற்று நித்திய ஜீவனை அடையக்கூடிய அனைத்து நம்பிக்கைகளும் மேசியாவின் மேலும், அவருடைய வேலையாகிய – கல்வாரியில் முடித்த அவருடைய பலியின் வேலையையும், ஆயிரம் வருட யுகத்தின் போது அவருடைய மகிமையான வேலையையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

நாங்கள் மேற்கோள் காட்டியிருக்கிற இந்த வேத பகுதியின் பின்னணி சுழலில், புலம்பித் தவிக்கும் சிருஷ்டியானது, அழிவின் அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு தேவ புத்திரரின் சுதந்திரத்துக்குள்ளாக (liberty) கொண்டு வரப்படுவார்கள் என்று அப்போஸ்தலன் அறிவிக் கிறார். இதன் அர்த்தம் தெளிவாக இருக்கிறது. ஆதாமின் மூலமாக அழிவு எல்லார் மேலும் வந்தது; அந்த அழிவிலிருந்து எல்லாருக்கும் விடுதலையானது இரண்டாம் ஆதாம் மூலமாக வர வேண்டியிருக்கிறது. அந்த விடுதலையை அல்லது சுதந்திரத்தின் சிலாக்கியங்களை அவர்கள் எப்படி பயன்படுத்தப் போகிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல், எல்லாரும் அத்தகைய அடிமைத்தனத் திலிருந்து விடுவிக்கப்படுவார்கள். அதை சரியாக பயன் படுத்துகிறவர்கள், மீட்பருடனும், பரலோக ராஜ்யத்துடனும் ஒத்திசைவுக்குள்ளாக வருவதுடன், முடிவாக நித்திய ஜீவன் பெற்று ஆசீர்வதிக்கப்படுவார்கள். அதைப் புரிந்து கொண்டு முழுமையாக வளர்ச்சியடைந்த பின்பு அதை நிராகரித்து ஒதுக்குகிறவர்கள் தங்களுக்கென்று இவ்வாறாக இரண்டாம் மரணத்தை தேர்ந்தெடுக்கிறவர்களாயிருப்பார்கள். (வெளி. 20:14). தேவ புத்திரர்களின் சுதந்திரம், அவர்கள் அழிவு, மரணத்திலிருந்து விடுதலையடைவது இங்கே வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கிறது. தேவ தூதர்கள் அப்படிப்பட்ட அழிவாகிய செத்துக்கொண்டே சாகும் நிலைமைகளால் கீழ்ப்படுத்தப்பட வில்லை, கட்டுப்படுத்தப்படவுமில்லை. அவர்கள் தேவ புத்திரர்களாக இருப்பதால், அழிவிற்கும் மரணத்திற்கும் அடிமைப்படாதவர்கள்.




ஆதாம் தன்னுடைய ஆதி பூரண நிலையில், தேவ னுடைய குமாரனாயிருந்தார். (லூக்கா 3:38 ஆங்கில வேதாகமம் பார்க்கவும்); ஆனால் அவன் தன்னுடைய குமாரத்துவத்தை தன் சார்பாகவும், தன்னுடைய சந்ததியார் அனைவரின் சார்பாகவும் இழந்துவிட்டதுடன், பதிலுக்கு சீர்கேட்டையும், மரணமாகிய அழிவுக்குரிய அடிமைத்தனத் தையும் பெற்றுக் கொண்டான். பின்பு ஆதாமுக்கும் அவனது சந்ததிக்குமான நம்பிக்கை, பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையிலிருந்து தேவனுடைய புத்திரர்க ளாக அவர்களுக்குத் தகுதியான சுதந்திரத்துக்குள்ளாக வருவது கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் அவர்களுடைய விடுதலையாயிருக்கிறது. வேத வாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கிறபடி, மனுக்குலத்தாரை அறியாமை, மூட நம்பிக்கை, பலவீனம், பாரம்பரியம் ஆகிய பல்வேறான அடிமைத்தனங்களிலிருந்து விடுவித்து "விருப்பமுள்ள எவரையும்" ஆதியிலிருந்த தேவனுடைய ரூபத்துக்கும், சாயலுக்கும் திரும்பக் கொண்டு வந்து, மீண்டும் அவர்களை தேவனுடைய மனுஷ குமாரர்களாக உருவாக்குகிற இந்த வேலைக்கு முழு ஆயிரம் வருஷ யுகமும் அர்ப்பணிக்கப் படும். ஆயினும், பாவஞ் செய்வதற்கு முன்பிருந்த தகப்ப னாகிய ஆதாமைப் போலல்லாமல், அவர்கள் [பழைய நிலைக்கு திரும்பக் கொண்டு வரப்பட்ட உலகமனுக்குலத்தார்] 6000 வருட வீழ்ச்சியின் போதும், அவர்கள் ஆயிரவருட [ஏழாவது 1000 வருட நாள்] உயிர்த்தெழுதல் யுகத்தின் போது அவர்களுடைய எழுப்பப்படுதல் மூலமாகவும் கூட நீண்டகால பிரயோஜனமான அனுபவத்தை அடைந் திருப்பார்கள்.

இந்த கருத்தைக் குறித்த அப்போஸ்த லனுடைய வாதம், முந்தின அதிகாரத்தில் நம்முடைய பாட தலைப்பு வசனத்துக்கு வழி நடத்தி வந்ததைக் கவனிக்கவும். பாவமானது ஒரு மனுஷ னுடைய கீழ்ப்படியாமையினால் பிரவேசித்தது என்றும், மனுக்குலத்தாரில் எல்லாருக்கும் அது பரவலாக்கப்பட்டது என்றும் கூறிய பின்பு, அவர், "**எப்படியெனில், ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர்** [எல்லாரும்] **மரித்திருக்க, தேவனுடைய கிருபையும், இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர் மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது. அல்லாமலும் ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய் மரணம் ஆண்டு கொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே. ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும்** [மேலும்] **ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு** (தண்டனை) **உண்டானது போல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று, அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்**" என்று அறிவிக்கிறார். (ரோமர் 5:12,15,17-19 ARV).

அப்போஸ்தலரால் சொல்லப்பட்ட இந்த வார்த்தை-கள் எவ்வளவு அழகாக தெளிவாயிருக்கிறது! இந்த வசனங்களின் மெய்யான முக்கியத்துவத்தை இவ்வளவு காலம் நாம் எப்படி கவனிக்காமல் இருந்துவிட்டோம் என்று நாங்கள் ஆச்சரியப்படுகிறோம். நம்முடைய கண்கள் சபையாகிய "சிறுமந்தை" என்கிற பரிசுத்தவான்கள் தெரிந் தெடுக்கப்பட்டு, மனுக்குலத்தாரில் மீதி பேர் நித்தியமாக வாதிக்கப்படுதலுக்கென்று தீர்க்கப்படுவார்கள் என்கிற வேதாகமத்துக்குப் புறம்பான உபதேசங்களால் குருடாக்கப் பட்டிருந்ததை நாம் உணர்கிறோம். நாம் அந்த மாயையி லிருந்து வெளிவந்துவிட்டபடியால், தேவனுடைய மகத்தான இரட்சிப்பின் திட்டத்தின் நீளங்கள், அகலங்கள் உயரங்கள் மற்றும் ஆழங்களைப் பார்ப்பதற்கு அதிகமதிகமாக நம்முடைய கண்கள் திறக்கப்படுகின்றன. இது முதலாவதாக இந்த சுவிசேஷ யுகத்தின் போது சபையோடு ஈடுபாடு கொள்கிறது. அதைத் தொடர்ந்து மீட்கப்பட்ட மீதியான யாவருடனும், அதாவது ஆதாமின் கீழ்ப்படியாமையால் தண்டனைபெற்ற, ஆதாமின் பிள்ளைகளில் மீதியான அனைவரிடமும் ஈடுபாடு கொள்கிறது. அவர்கள் விலை-யேறப்பெற்ற இரத்தத்தால் மீட்கப்பட்டு அவர்களுடைய ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து நீதிமானாக்கப்படவிருக் கிறார்கள்; மகாபெரிய மீட்பர் தம்முடைய மாபெரும் வல்லமை யையும், ஆளுகையையும் பயன்படுத்துகிறபடியால், அவ-ரால் சுதந்திரத்தைப் பெறவிருக்கிறார்கள். (வெளி. 11:15-19).

## ஏன் இந்த நீண்ட தாமதம்?

ஏன் தேவன் உலகத்தாருக்கு இந்த ஆசீர்வாதங்

களைக் கொண்டுவர நீண்ட காலமாக தாமதம் செய்கிறார்? என்ற கேள்வி அடிக்கடி கேட்கப் படுகிறது. மெய்யாகவே தேவனுடைய திட்டம் மனுஷருடைய எந்த திட்டங்கள் மற்றும் கோட் பாடுகளை விட அதிக மேன்மையானதும், உத்தமமானதுமாக இருக்குமானால், ஏன் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை? ஏன் அவர் இந்த உலகத்தாரை நீண்டகாலமாக பாவத்திற்கும், மரணத்திற்கும் அடிமையான நிலையில் இருக்க அனுமதித் திருக்கிறார்? – அவர் மீட்பரை அனுப்புவதற்கு முன் 4000 ஆண்டுகளுக்கு மேலாகவும், அதோடு கூட உலகத்திற்கான விலைக்கிரயத்தை மீட்பர் கொடுத்துவிட்ட பிறகும் கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளும் கடந்துவிட்டன. ஆயினும் வெறும் ஒரு கைப்பிடியளவு மனுக்குலத்தார் மட்டுமே, நாம் இரட்சிக்கப் படுவதற்கு வானத்தின் கீழே, மனுஷருக்குள்ளே கொடுக்கப் பட்ட ஒரே நாமத்தைப் பற்றி கேள்விப்பட்டு இருக்கிறார்கள். ஏன் இந்தத் தாமதம்? இது தேவனுடைய அன்பு மற்றும் வல்லமையின் கோரிக்கைகளுக்கு முரண்படவில்லையா? அவர் அன்புள்ள வராயிருந்தும், உலகத்தாருக்கு உதவி புரிய தாமதம் ஏற்படுவதாயிருந் தால், அவர் வல்லமையில் குறைவுள்ளவராயிருக்கிறாரா? அவர் தம்முடைய நல்ல நோக்கங்களை நிறைவேற்ற முடியாதவராயிருக்கிறாரா? அல்லது அவர் வல்லமையுள்ளவராயிருந்தாலும் அன்பு மற்றும் சித்தத்தில் குறைவுபடுகிறாரா?




இல்லை, தேவனுடைய அன்பு எல்லையற்றது, அவர் ஏற்கனவே நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் பூரண மனுஷீக ஜீவனை விலையாகக் கொடுத்து, மனுக்குலத் திற்காக மீட்பின் வேலையை நிறைவேற்றியிருக்கிறார் என்பதாக வேத வாக்கியங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன. தேவனுடைய அன்பு இன்றும், 19 நூற்றாண்டுகளுக்கு முன் இருந்தது போலவே உள்ளது என்பதையும் கூட அவை நிச்சயப்படுத்துகின்றன. தெய்வீக வல்லமை சர்வவல்லமை–யுள்ளது என்றும், அது தேவனுடைய சித்தத்தை முழுமையாக நிறைவேற்றும் படியாக ஏற்ற சமயத்தில் தொடங்குவ தற்காகவும், மேசியாவாகிய மீட்பர் மூலமாக பூமியின் சகல ஜாதிகளையும் முழுவதுமாய் ஆசீர்வதிக்கக் காத்திருக்கிறது என்றும் அவை நமக்கு நிச்சயப்படுத்துகின்றன.

தாமதத்திற்கான விளக்கம் வேத வாக்கியங்களில் முழுமையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. தெய்வீகத் திட்டம் உலகத்தாருக்கு நீட்டிக்கச் செய்து அதன் ஆசீர்வாதங் களைக் கொடுத்து உணர்த்துவதற்கு முன்பாக, இன்னொரு உயர்த்தப்படும் வேலை முதலாவதாக நிறைவேற்றப்பட வேண்டியிருக்கிறது என்பதாக அவை நமக்குத் தெரியப் படுத்துகின்றன. – ஆதாமையும், அவனது சந்ததியையும் ஆசீர்வதிக்கிற தேவனுடைய நோக்கமானது திரும்பக் கொடுத்தலின் வாக்குத்தத்தமாக இருக்கிறது; ஆயிர வருட யுகம் தான், 6000 வருட கால பாவம் மற்றும் மரணத்தின் போது மனம், சன்மார்க்கம், சரீரம் மற்றும் மதசம்பந்தமான சீர்கேடுக்குள்ளாக மூழ்கியிருப்பதிலிருந்து மனுக்குலத் தாரை தூக்கி எடுப்பதற்கான “காலங்களாக” அல்லது திரும்பக் கொடுத்தலின் வருடங்களாக இருக்கும். அதுவே இயல்பான பூமியை ஆசீர்வதிப்பதற்கும், அதை தேவனுடைய மகிமையினால் நிரப்பப் பட்ட பூரண மனுக்குலத்தாருக்கு பொருத்த மான வீடாக மாற்றுவதற்கான காலமாகவும் இருக்கும். (ஏசாயா 35; எண்.14:21).

ஆனால் தேவன் அதற்கும் முன்னதாக இன்னும் அதிக அற்புதமான வேலையை அதாவது, சிறுமந்தையாகிய தெரிந்தெடுக்கப் பட்ட சபை என்னும் கிறிஸ்துவின் மண–வாட்டியை தேர்ந்தெடுக்கும் வேலையை செய்து முடிக்கத் திட்டமிட்டிருந்தார். வெறுமனே மானிட பூரணத் துக்குத் திரும்பக் கொண்டுவரப்படுவதற்கு பதிலாக, அவர்கள் மரண பரியந்தம் சுயத்தை பலியிடுவதன் மூலமாக கர்த்தருக்கு தங்கள் உத்தமத்தை நிரூபித்து, இவ்வாறாக அவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் – கிறிஸ்துவுடன் பங்கடைய பாத்திரவான்களாக, அதாவது, பூமிக்குரிய சுபாவத்திலிருந்து தெய்வீக சுபாவத்திற்கு, தேவ தூதர்கள், கர்த்தத்துவங்கள் மற்றும் வல்லமைகளுக்கும் மிக மேலான இடத்தில் தங்களுடைய மகிமையடைந்த மீட்பரும் தலையு மானவருக்கு ஒப்பாக மாற்றப்பட தகுதி பெறுவார்கள். சபைக் குரியவர்களை தேர்ந்தெடுக்கும் இந்த வேலையானது முக்கியமான ஒன்றாகும்; அது நீண்டகாலம் தொடர்ந்து நடைபெற்று வந்தது. அதன்படி இந்த தெரிந்தெடுக்கப்பட்ட சபையின் அங்கங்களாக மாறுவதற்கும், மீட்பருடன் உடன் சுதந்தரவாளிகளாவதற்கும் சிலாக்கியத்தைப் பெற்றவர்கள், அந்த சிலாக்கியத்தை மிகவும் உயர்வாக மதித்துணர்ந்து கொள்ள முடியாதிருக்கலாம்; ஆனால் அப்போஸ்தலருடன் சேர்ந்து வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களின் மேன்மையை ஒப்பிடும் போது, எந்த நஷ்டமோ அல்லது பலியையோ கூட குப்பையென கருதுவது நியாயமானதாகும்.

கிறிஸ்துவின் மணவாட்டி தேவனுடைய ஆயிரம் வருஷ யுகத்துக்கு முந்தின வித்தில் மிக உயர்ந்த ஒழுங்கு வரிசையில் இருக்கையில், தேவனுடைய யுகங்களைப் பற்றிய திட்டமானது வெற்றிகரமாயிருப்பதற்கு அவசியமாக அழைக்கப்பட்ட பிறவகுப்புகளும் இருக்கின்றன. PT ’77, பக்கம் 37,38–ல் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை அடிப் படையாகக் கொண்டு: ஏசாயா 49:10, “**அவர்கள் பசியாயிருப் பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை; உஷ்ணமாகிலும், வெயிலாகிலும் அவர்கள் மேல் படுவதுமில்லை, அவர்களுக்கு இரங்குகிறவர் அவர்களை நடத்தி, அவர்களை நீரூற்றுகளிடத் திற்குக் கொண்டு போய் விடுவார்.**” இந்த வாக்கியம் கிறிஸ்து வின் ஆயிரம் வருட யுக மத்தியஸ்த ஆட்சியின் கீழ் வருகிற திரும்பக் கொடுத்தல் வகுப்பாரைப் பற்றி பேசுகிறது. வசனம் 11, “**என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன், என் பாதை கள் உயர்த்தப்படும்.**” இந்த வாக்கியம் திரும்பக் கொடுத்த லுக்கு முந்தின பிரதிஷ்டை செய்த வகுப்பார்களைக் குறித்துப் பேசுகிறது. இங்கே வசனம் 10–ல் குறிப்பிடப்பட்டுள்ள திரும்பக் கொடுத்தலைப் பெறும் வகுப்பாருக்கும், வசனம் 11–ல், திரள்கூட்டத்தாருக்கும், அதைப் போலவே உள்ள திரும்பக் கொடுத்தலுக்கு முந்தின பிரதிஷ்டை செய்த பிற வகுப்பார்–களுக்குமிடையேயான தெளிவான வேறுபாடு இங்கே ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. தேவன் திரும்பக் கொடுத்தலுக்கு

முந்தி பிரதிஷ்டை செய்த ஐந்து வகுப்பார்களான, சிறுமந்தை, மூப்பரான பாத்திரவான்கள், திரள்கூட்டத்தார், வாலிபரான பாத்திரவான்கள், பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக் காரர்கள் ஆகியோரை முறையே - சீயோன், மோரியா, அக்ரா, பெஸித்தா மற்றும் ஓஃபேல் மூலமாக அடையாளப் படுத்தப்பட்டிருக்கிற இவர்களை - பரிசுத்த பெரும்பாதையில் தெரிந்து கொள்ளப்படாதவர்களுக்கு உதவி செய்கிற விசேஷ கருவிகளாக ஏற்படுத்துவார். நாம் சங்.72:3-ஐ ஒப்பிட்டுப் பார்ப்போம். "**பர்வதங்கள் ஜனத்திற்கு சமாதானத் தைத் தரும், மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும்.**" தேவன் இந்த ஐந்து திரும்பக் கொடுத்தலுக்கு முந்தின வகுப்பார்களை இந்த நோக்கத்திற்காக உயர்த்துவார். பூமியின் பல்வேறான பகுதிகளிலிருந்து வரும் தெரிந்து கொள்ளப் படாதவர்கள் பூரண கிறிஸ்துவால் (the Christ) நிர்வாகிக்கப் பட்டு, திரும்பக் கொடுத்தலுக்கு முந்தின மற்ற நான்கு பிரதிஷ்டை செய்த வகுப்பார்களால் உதவி செய்யப் படவிருக்கிறதுமான ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள்.

## இரண்டு வகையான தவித்தல்கள்

நம்முடைய பாட தலைப்பு வசனத்திலும் (ரோமர் 8:23) மற்றும் அதன் பின்னணி சுழலிலும் கர்த்தருடைய ஜனங்களுக்கும், உலகத்தாருடைய தவித்தல்களுக்கு மிடையேயுள்ள வித்தியாசத்தை அப்போஸ்தலன் எவ்வாறு வேறுபடுத்திக் காட்டுகிறார் என்பதைக் கவனிக்கவும். சிறுமந்தை பற்றி, "**நாமுங் கூட நம்முடைய சரீர** (கிறிஸ்துவின் சரீரம்) **மீட்பாகிய** (விடுதலை) **புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்**" என்று கூறுகிறார். தேவனற்ற மற்றும் நம்பிக்கையில்லாத உலகத்தார் சந்தேகத்திலும், விரக்தியிலும் புலம்பி தவிக்கின்றனர்; ஆனால் சிறுமந்தையோ, மகிமையான நம்பிக்கையுடன், ஆத்துமாவிற்கு நங்கூரமாகவும், நிச்சயமாயும், நிலையாகவும், திரையின் உட்புறத்திற்குள் பிரவேசிக்கிறார்கள். அவர்கள் உலகம் புலம்பித் தவிக்கிற அதே முறையில் புலம்பவில்லை.

ஆனால் அவர்களுடைய எல்லா நம்பிக்கைகள், கர்த்தரில் அவர்களுக்கிருக்கும் எல்லா சந்தோஷங்கள், ஒருவருக்கொருவர் கொண்டிருக்கிற எல்லா ஐக்கியம் ஆகியவைகளெல்லாம் இருந்தபோதிலும், சிறுமந்தை யானது தங்களுடைய மாம்ச கூடாரத்தில் "**பாரஞ்சுமந்து தவிக்கிறதினால்**" புலம்பித் தவித்தார்கள். (2 கொரி. 5:2,4). இன்றைய நாளில் பிரதிஷ்டை செய்கிற தேவனுடைய ஜனங்கள் எல்லாருடைய விஷயத்திலும் இது அப்படியே இருக்கிறது. நம்முடைய எல்லா தற்கால ஆசீர்வாதங்களும், எதிர்காலத்துக்கான நம்முடைய சந்தோஷமான எதிர்பார்ப்பு களும், "சகலமும்" (ரோமர் 8:28), தீமையான காரியங் களும் கூட நம்முடைய நன்மைக்கு ஏதுவாக கிரியை நடப்பித்து நாம் அழைக்கப்பட்டிருக்கிற மகிமையான ராஜ்யத்தில் நம்முடைய பங்கிற்காக நம்மை ஆயத்தப் படுத்துகிறது என்று நாம் உணர்ந்து கொள்வதும், உபத் திரவம், வருத்தம் மற்றும் நம்முடைய பூமியிலுள்ள சூழலினால் ஊக்கமிழத்தல் ஆகியவற்றை சில நேரங்களில் ஓரளவுக்கு நாம் உணர்ந்தாலும், இவைகளெல்லாம் நம்மைத் தடுக்கவே முடியாது.

நம்முடைய சரீரம், மனம், சன்மார்க்கம் மற்றும் மத சம்பந்தமான பலவீனங்கள் சில நேரங்களில் வலுவாக வெளிப்படுகின்றன. அதின் காரணமாக புது மனம், இருதயம், மற்றும் சித்தத்தில் நாம் விரும்புவதைச் செய்ய முடியாமல் போகிறது. (ரோமர் 7:14-25). நாம் நம்முடைய இருதயங்களில் மகிழ்ச்சி இருந்தாலும், துன்பங்களில் ஆனந்தப்பட முடியாமல் போகிறது. அப்போஸ்தலர் பேதுரு தெரிவிக்கிறது போல, நாம் இப்பொழுது, "**பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறோம்.**" (1 பேதுரு 1:6). ஆனாலும் நம்முடையது வெளிப்புறமான புலம்பித் தவிப்பது அல்ல; அப்படி தவிக்கவும் கூடாது. சிறுமந்தை மாம்சத்தி லிருக்கையில் செய்தது போல நாம் "**நமக்குள்ளே புலம்பித் தவிக்கிறோம்.**" இது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தவிப்பு, மாற்றிய மைக்கப்பட்ட ஒன்று. அதற்கான காரணம் என்னவெனில், கர்த்தருக்குள் தற்கால சந்தோஷங்களும், ராஜ்யத்தில் மகிமையான எதிர்காலத்திற்கான நம்பிக்கைகளும் அதை ஈடுசெய்கின்றன.

சிறுமந்தையினரின் விடுதலையானது முதலாம் அல்லது முதன்மையான உயிர்த்தெழுதலில் (வெளி. 20:6) 1878 முதல் 1950 வரை நடைபெற்றது. ஆகவே இந்த "கிருபை" அல்லது தயவு முழுவதுமாக தெய்வீக சுபாவத்தில் பங்குகொள்ளும் சிறுமந்தைக்கு, 1950-ல் நம்முடைய கர்த்தருடைய எபிஃபெனி அல்லது அப்போகாலிப்ஸ் காலத்தின் போது - "**இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது**" (கிரேக்க மொழியில் - அப்போகாலுப்ஸிஸ்) கொண்டு வரப் பட்டார்கள். -(1 பேதுரு 1:13; PT'65, பக்கம் 59 பார்க்கவும்).

கர்த்தருடைய எபிஃபெனி அல்லது அப்போகா லுப்ஸ் காலத்தில் தான், விரிவான கருத்தில், உபத்திரவ காலத்தின் போது, திரள்கூட்டத்தார் ஆவிக்குரிய நிலையில் தங்கள் உயிர்த்தெழுதலைப் பெற்றுக் கொண்டனர். வாலிபரான பாத்திரவான்களோ, மூப்பரான பாத்திரவான்களுடன் "**மேலான உயிர்த்தெழுதலில்**" (எபி. 11:35) பங்கடைய தகுதியுள்ளவர்களாகத் தங்களை மெய்ப்பித்துக் காட்டி, தங்கள் ஓட்டத்தை முடிப்பார்கள். அத்துடன் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள், தங்கள் ராஜ்ய மகிமைக் காக ஆயத்தம் செய்யப்பட்டு "**நீதிமான்களின் உயிர்த் தெழுதலில் பங்கடைவார்கள்.**" (லூக்கா 14:14). இந்த வகுப்பார்கள் தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களாக இவ்வாறு அவருடைய பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு, தங்களுக்குள் தவித்துக் கொண்டு, தங்கள் விடுதலைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் புலம்பித் தவிக்கும் சிருஷ்டிகளான பொதுவான உலகம் தேவனுடைய திட்டத்தை அறியாதிருக் கிறார்கள். அதன் புலம்பித் தவித்தல் நம்பிக்கையில்லாத நிலையின் குறியீடாய் இருக்கிறது. ஆனால் தேவன், "**அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவர்களாயிருக்கிற**" நாம் (1 பேதுரு 2:9), மனுக்குலத்துக்காக அவர் என்ன ஏற்படுத்தி வைத்திருக் கிறார் என்பதை உலகம் அறியாவிட்டாலும், நாம் அறிந்திருக் கிறோம். ஏனெனில் இருள் இப்பொழுதும் பெரிய அளவில் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடியிருக்கிறது.



**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். ரோமர் 8:28.**

(லூக்கா 60:2). ஆயிரம் வருஷ அரசாட்சியின் போது, கிறிஸ்துவின் மூலமாக, பூமியிலுள்ள சகல ஜாதிகளும் மரண நிலைமையிலிருந்தும், செத்துக் கொண்டிருக்கும் நடைமுறையிலிருந்தும், திரும்பக் கொண்டு வரப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவதுடன் முழுமையான, நேர்த்தியான மற்றும் நித்திய ஜீவனை அடைந்து கொள்வதற்கான இலவசமான, நியாயமான மற்றும் தனிப்பட்ட பரீட்சை கொடுக்கப்படும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். (வெளி. 20:12,13; கலா. 3:8; அப்.17:31; 1 தீமோ. 2:3-6). சீர்-திருத்தப்பட முடியாத துன்மார்க்கர் மட்டுமே இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். (சங்.145:20; வெளி. 21:8).

உலகத்தார் அறியாமையில் இருந்தாலும், மெய்-யாகவே சூரிய உதயத்துக்காகக் காத்துக் கொண்டிருக் கிறார்கள். சீக்கிரத்தில் இந்த மகா உபத்திரவ காலத்தின் முடிவுக்கு பிறகு, நீதியின் சூரியன் உதிக்கும். அதன் செட்டையின் கீழ் ஆரோக்கியம் இருக்கும். (மல். 4:1,2). பின்பு ஆவியும், மணவாட்டியும் ஆயிர வருட யுக மகிமை-யில் உயர்த்தப்பட்டு, பொதுவான மனுக்குலத்தாரிடம் "வா" என்பார்கள். பின்பு உலகத்தாரின் ஆசீர்வாத காலம் தொடங்கும். பின்பு புலம்பித் தவிக்கும் சர்வ சிருஷ்டியும் விடுதலை செய்யப்பட்டு, மரணத்தின் அழிவிலிருந்து - சடத்துவ, மானத, சன்மார்க்க மற்றும் மத சம்பந்தமான சிறையிலிருந்து வெளியே வந்து, -"**தேவனுடைய பிள்ளை களுக்குரிய மகிமையான சுயாதீனத்தை**" பெற்றுக் கொள் வார்கள். (ரோமர் 8:21). பின்பு "**விருப்பமுள்ளவன்**" "**ஜீவ தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்**" (வெளி. 22:17). மனுக்குலத்திற்கான இந்த மகிமையான நித்திய ஜீவ ஈவு அவர்களுடைய அன்பான தேவனிடமிருந்து "**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாக**" வருகிறது. (ரோமர் 6:23; யோவான் 3:16).

## தேவனுடைய ஜனங்களின் பொறுப்பான பதில்

பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், சிறுமந்தையின் நல்ல உதாரணத்தைப் பின்பற்று வோமாக. நாம் நம்முடைய பாடத்தலைப்பு வசனத்தின் முழுமையான நிறைவை நமக்கே பொருந்தும்படி செய்ய முடியாது; ஏனெனில் "**ஆவியின் முதற்பலன்களை**" நாம் பெற்றிருக்கவில்லை. மேலும் கிறிஸ்துவின் சரீரமாகிய "**நம்முடைய சரீர மீட்புக்காக**" நாம் காத்திருக்கவில்லை. ஆயினும், நாமும் நமக்குள்ளேயே புலம்பித் தவித்து, நம்முடைய மீட்புக்காகவும், குமாரத்துவத்தின் நிறைவடைத லுக்காகவும் காத்திருக்கிறோம். அதை உயிர்த்தெழுதலில் நாம் பெற்றுக் கொள்வோம். அது எப்படிப்பட்ட மகிமையா யிருக்கும்! தேவனுடைய ஏற்பாடுகள் எல்லாம் எவ்வளவு நீதியானதும், எவ்வளவு நியாயமானதும், எவ்வளவு அன்பானதுமாக இருக்கின்றன! இந்த விஷயங்களை உணர்ந்து கொள்வதற்கு நாம் நம்முடைய இருதயங்களை பாராட்டுகிற அன்புடன், நம்முடைய பரமபிதாவுக்கு மிகவும் நெருக்கமாக இழுத்துச் செல்ல வேண்டும். நம்முடைய துதிக் கும், வணங்குதலுக்கும் மிகவும் பாத்திரமாயிருக்கிறவராகிய அவரை நாம் பக்தியுடன் தொழுது கொள்ள வேண்டும்.

ஆயினும், பொதுவான உலக மனுக்குலத்தார் இப்போது இந்த காரியங்களை உணர்ந்து பாராட்டக் கூடியவர்களாக இருப்பார்கள் என்று நாம் எதிர்ப்பார்க்கிற தில்லை. அவர்கள் இரட்சிப்பின் திட்டத்தை இப்போது புரிந்து கொள்ள வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமல்ல. "**கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில்** (பயபக்தியாயிருப்பவர்களிடத்தில்) **இருக்கிறது: அவர்களுக்கு தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்.**" (சங். 25:14). எஜமானர் தம்முடைய விசுவாச உண்மைத்துவ முள்ள முற்கால சீஷர்களிடம் கூறியது போல, இப்பொழுதும் நம்மிடம் கூறுகிறார், "**பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை... அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்து கொள்ளாதவர்-களாயும் இருக்கிறபடியினால் நான் உவமைகளாக அவர்க ளோடே பேசுகிறேன்.**" (மத். 13:11,13). அவர்கள் ஏற்றகாலத்தில் செவி கொடுத்துக் கேட்டு, புரிந்து கொள்வார்கள். (எண். 14:21; 2 தீமோ. 2:3-6). ஆனால் இப்போது தேவன் தம்முடைய தெரிந்துக் கொள்ளப்பட்ட வகுப்பார்களையும் (சிறுமந்தை நீங்கலாக), தம்முடைய குவாசி எலெக்ட் வகுப்பி னரையும், ஆயிர வருட யுகத்துக்கு முந்தின ஆபிரகாமின் வித்தின் கீழ்ப்பட்ட பகுதிகளாக, வந்து கொண்டிருக்கிற ராஜ்யத்தில் தெரிந்து கொள்ளப்படாதவர்களை ஆசீர்வதிப்ப திலும், அதன் சத்திய மற்றும் நீதியின் ஆளுகையிலும், அவர்களுடைய பங்கைப் பெறும்படியாகவும் அபிவிருத்தி அடையச் செய்து வருகிறார்.

கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிற காதுகளை யும், கண்களையும் பெற்றிருக்கிற நாம் எல்லா நன்றியறித லோடும், மனத்தாழ்மையோடும் பதிலளிப்போமாக. வெளிப் புறமான புகழ்ச்சியோடு மாத்திரமல்ல, ஆனால் இருதயப் பூர்வமான துதியோடும் கூட, அவருடைய அன்பிரக்கத்தை யும், மென்மையான இரக்கத்தையும் அறிக்கையிடுவோ மாக; அத்துடன் நமது நன்றியறிதலும், மதித்துணர்ந்து பாராட்டுதலும் அதிகமதிகமாக நம்முடைய இருதயங்களை பரிசுத்தப்படுத்தி, உலகத்திலிருந்தும், அதன் குறிக்கோள் மற்றும் சுயநலத்திலிருந்தும் நம்மைப் பிரிப்பதாக. பாவத் துக்கு எதிராக, பிரத்தியேகமாக, நம்முடைய சொந்த சாவுக் கேதுவான சரீரங்களில், நல்ல போராட்டத்தைப் போராடுவோ மாக; ஏனெனில், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தின் கீழிருக்கிறவர்களுக்கும், மாம்சத்தின்படி நடவாமல், ஆவி-யின்படி நடக்கிறவர்களுக்கும் எதிராக மாம்சத்தின் அபூர ணங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

(ரோமர் 8:1). இருந்த போதிலும் நம்மிலிருக்கிற கர்த்த ருடைய ஆவி அவருக்கு மிகவும் பிரியமானதும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதுமான அந்த பூரணத்துக்கு அதிகமதிக மாக நாம் வாஞ்சிக்கும்படியாகவும், போராடவும் வழிநடத்த வேண்டும். ஆகையால் நாம் ஆவியின் கனிகளை அபிவி ருத்தி செய்வதிலும், பூரணப்படுத்துவதிலும், தைரியமாக விடாமுயற்சியுடன் இருப்போமாக. அதை விழுந்து போன மாம்சத்தில் பூரணத்தை எதிர்பார்த்து அல்ல. ஆனால் எல்லாருக்காகவும், ஒரே தரமாகவும், சர்வலோகத்தின் பாவத்திற்கும் போதுமானதாக செலுத்தப்பட்ட அந்த மகாபெரிய பாவநிவாரண பலியின் புண்ணியத்தின் மீது சார்ந்திருப்போமாக.

தேவனைப் பற்றிய விஷயத்தை சிக்கலானதாக ஆக்கிக் காட்ட நாங்கள் விரும்பவில்லை; மாறாக, நாங்கள் அவரை வரவேற்கத்தக்கவராக ஆக்கவே விரும்புகிறோம்!




# இயேசு மற்றும் அவருடைய ஜனங்களுடன் உள்ள ஐக்கியத்தின் நம்பிக்கை

## Hope of Fellowship with Jesus and His People

**"நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்."** (ரோமர் 12:12)

நம்முடைய பாட தலைப்பு வாக்கியம் மூன்று பாகங்க ளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் கவனிக் கிறோம்.

(1) நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்
(2) உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்
(3) ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்

பவுல் அப்போஸ்தலர் கொஞ்சம் வார்த்தைகளைக் கொண்டு அதிகமான விஷயங்களை விளக்கிச் சொல்வதில் தனிப்பட்ட திறமையுள்ளவராயிருந்தார். இந்த வேத பகுதி, இந்த திறமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. நம்முடைய பாடத்தின் முதல் பகுதியாகிய, "**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்**" என்ற விஷயத்தை ஆராய்ந்து பார்ப் போம். நம்பிக்கை என்னும் வார்த்தை, வேதாகமத்தில் இரண்டு கருத்துகளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது சில எதிர்கால நன்மையை நாம் விரும்பி எதிர்பார்ப்பதன் காரணமாக உள்ள இருதயம் மற்றும் மனதின் பண்பைக் குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, சங். 31:24-ல் "**கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல் லாரும் திடமனதாயிருங்கள்.**" இரண்டாவதாக, விரும்பிய மற்றும் எதிர்பார்த்த காரியம் அல்லது காரியங்கள் என்ற கருத்தில் இது பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, எபி. 6:18-ல், நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக் கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடி வந்த நமக்கு என்று குறிப் பிடப்பட்டுள்ளது. ஆகவே, வேதாகமம், நம்பிக்கை என்ற வார்த்தையை இரண்டு கருத்துக்களில் பயன்படுத்துகிறது.

(a) சில எதிர்கால நன்மையை ஒருவன் விரும்பி எதிர்ப் பார்ப்பதன் காரணமாக, இருதயம் மற்றும் மனதின் செயல்– பாடு என்ற கருத்தில்; (b) ஒருவன் விரும்புகிற மற்றும் எதிர்பார்க்கிற காரியம் அல்லது காரியங்கள் என்ற கருத்தில். இந்த கட்டுரை இரண்டாவது கருத்தை, அதாவது, விரும்பிய மற்றும் எதிர்பார்த்த காரியம் அல்லது காரியங்களை முக்கியப்படுத்துவதாக இருக்கிறது.

சிறுமந்தை வகுப்பினர் எல்லா வகுப்பினரிலும் மேலான அழைப்பைப் பெற்றுக் கொண்டனர்; ஆகவே, அவர்களுக்கு அனுகூலமாக நம் முதல் விளக்கத்தை நாங்கள் தருகிறோம். Young's சொல்லர்த்தமான மொழிபெயர்ப்பு நம் வசனத்தின் முதல் பகுதியை "**அந்த நம்பிக்கை யில் சந்தோஷமாயிருங்கள்**" என்று தருகிறது. The Diaglott-ம் அதே போல ஒரு சிறந்த மொழிபெயர்ப்பைத் தருகிறது. அது "**அந்த நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்**" என்று தருகிறது. The Authorized மற்றும் மற்ற பதிப்புகள் மிகச் சிறந்த கருத்தைத் தரும் வசனத்தைக் கொள்ளையிட்டுவிட்டன, எனவே நாம் இதை இங்கு தருகிறோம். இந்த பதிப்பாளர்கள் பரம அழைப்பைப் பற்றி அறிந்திருக்கவில்லை, ஆகவே, அவர்கள் திட்டவட்ட மான பிரிவுக்கூறை விட்டு விட்டதால், அதிகமாக அவர்களை நாம் குற்றஞ்சாட்டத் தேவையில்லை. ஏனெனில், சில நேரங் களில் மொழிபெயர்ப்பில் 'அந்த' என்ற வார்த்தையை விட்டு வருவது ஏற்றதாக இருக்கிறது.

ஆனால் அப்போஸ்தலன், வெறுமனே பொதுவாக நம்பிக்கை கொள்தல் என்றல்லாமல், பரம அழைப்பு பற்றிய அந்த நம்பிக்கையை (பிலி. 3:14) மிகத் தெளிவாகவும், திட்டவட்டமுமான நம்பிக்கையாகவும் மனதில் கொண்டிருந் தார், நம்பிக்கையில் சந்தோஷமாயிருப்பது என்பது சபை– யானவர்கள் தங்கள் இருதயங்களில் கர்த்தருடன் இருப்ப தும், அவரைக் காண்பதுமாகிய நம்பிக்கையில் முழு மகிழ்ச் சியைப் பெற்றுக் கொண்டு, கர்த்தருடன் ஆளுகை செய்து கொண்டு, அவரைப் போல இருப்பதற்குமான போதனை யாக இருந்தது. இதுதான் இந்த வசனத்தின் குறிப்பிடப் பட்டுள்ள அர்த்தமாக இருக்கிறது. குணாதிசயம் மற்றும் இயல்பு ஆகியவற்றில் இயேசுவைப் போல இருப்போம் என்றும், அவரைப் போன்ற இருதயத்தையும், மனதையும் உடையதாயிருப்போம் என்றும், அவரைப் போன்ற தெய்– வீகத் தன்மை மற்றும் அவருடைய நித்திய கூட்டாளிகளாக இருப்போம் என்றதான நம்பிக்கையுடனிருப்பதுமாகும். ஆகவே, சிறுமந்தையின் நம்பிக்கையானது, இந்த எல்லா

காரியங்களையும் விரும்புவதும், எதிர்பார்ப்பதுமாகவும் இருந்தது.

## மற்ற வகுப்பார்களின் நம்பிக்கை

வேறு சில மொழிபெயர்ப்புகள் சற்று வித்தியாசமான கருத்துக்களைத் தருகிறது. உதாரணமாக, ASV: "**உங்கள் நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்**" Moffat: "**உங்கள் நம்பிக்கை உங்களுக்கு சந்தோஷமாயிருப்பதாக.**" பல்வேறான இந்த கருத்துக்கள் தேவனுடைய ஜனங்களாகிய எல்லா வகுப்பினரும், அதாவது ஒவ்வொரு வகுப்பினரும், தாங்கள் சம்பந்தப்பட்ட நம்பிக்கையில் சந்தோஷமாயிருக்கலாம் என்றும், இந்த வசனத்தின் கருத்து இவ்வாறாக, தேவனிடத்தில் விசுவாச உண்மைத்துவமுள்ள பிரதிஷ்டை செய்த ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் பொருத்தமாக இருக்கிறது என்றும் தெரிவிக்கிறது. சிலர் தூதர்களைப் போல இருந்து, ஒரு போதும் களைப்படையாதவர்களாக, கல்யாண விருந்தில் மணவாட்டியின் தோழிகளாகவும், தாதியர்களாகவும், மணவாட்டியின் மற்றும் மணவாளனின் பிள்ளைகளுக்கு பயிற்சியாளர்களாகவும் இருப்பார்கள். மற்றவர்கள் மேன்மையான உயிர்த்தெழுதல் பற்றிய நம்பிக்கையுடன், உடனடியாக பூரணமாகுதலும் மூப்பரான பாத்திரவான்களுடன் பிரபுக்களாக உலகத்தாரை பூரணப்படுத்தி ஆசீர்வதிப்பவர்களாக இருப்பார்கள். மற்றவர்கள் இழந்து போனதைத் திரும்பப் பெறுதல் மற்றும் பூரணப்படுதல் நம்பிக்கையுடன் தெரிந்துக் கொள்ளப்படாதவர்களுக்கு உதவி செய்து ஆசீர்வதிப்பவர்களாக இருப்பார்கள்.

யேகோவா தேவனுடைய பிரதிஷ்டை செய்த சில பிள்ளை–களாக, இயேசு நமக்காக வெளிக்காட்டின அப்படிப்பட்ட அன்பை சிந்தித்துப்பார்க்க கூடிய சிலாக்கியமுள்ளவர்களாக இருக்கிறோம். அதற்கும் மேலான ஒரு அன்பு உள்ளது. அது பிதாவானவர் தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்காகப் பலியாக தந்ததில் காட்டிய அன்பு. அவர் முதலில் நம்மை நேசித்ததினால், நாமும் அவரை நேசிக்கிறோம். நீதிமானாக்கப்படுதல், போதிக்கப்படுதல், பரிசுத்தமாக்கப் படுதல் மற்றும் விடுதலையாக்கப்படுதல் ஆகியவற்றில் நாம் அவரை நேசிக்கிறோம். அவர் நல்லவராயிருக்கிறதினாலும், அவர் நமக்கு செய்கிற நன்மைகளுக்காகவும் நாம் அவரை நேசிக்கிறோம். அவருடனும், அவருடைய ஜனங்களுடனும் மிக நெருக்கமான ஐக்கியத் தொடர்பு வைத்துக் கொள்ளும் சிலாக்கியத்தை நாம் எப்பொழுதும் விரும்புகிறவர்களாக இருக்கிறோம். இந்த உறவை விட மேலான உறவு வேறு எதுவுமே இல்லை.

நம்முடைய தற்போதைய பூமிக்குரிய ஜீவியத்தில் திருப்தியளிக்காத அநேக காரியங்கள் உள்ளன. இரவு நேரத்தில் எட்டு மணி நேரம் நாம் கண்டிப்பாக உறங்க வேண்டியிருக்கிறது, சாப்பிடுவதற்கு ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரங்களைச் செலவிட வேண்டியிருக்கிறது, நம்முடைய பூமிக்குரிய சரீரங்களுக்குத் தேவையான மற்றும் பிற அநேக காரியங்களையும் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், தேவனுடைய பூமிக்குரிய ராஜ்யம் ஸ்தாபிதமாகும் போது காரியங்கள் முற்றிலும் வித்தியாசமானதாக இருக்கும். பலமுள்ள சரீரத்துடனும், சிறந்த ஆற்றலுடனும் நாம் வேலை செய்யக் கூடியவர்களாக இருப்போம். நாம் இப்பொழுது நம்முடைய சரீரத்துக்காக நம்முடைய நேரத்தில் பாதி அளவிற்கும் மேலாக செலவிடுகிறோம். பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் என்ற நம்பிக்கையுள்ளவர்களாக, நாம் இப்பொழுது அவரைப் போன்ற குணாதிசயமுள்ளவர்களாக ஆவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். நல்ல குணாதி சயத்தைப் போல வேறு எதுவும் அவ்வளவு மதிப்புமிக்கதாக இருக்க முடியாது. ஆம், தேவனுடைய மனநிலையை நாம் நம்மில் பெற்றுக் கொள்ள முடியும்.




இந்த நம்பிக்கை ஜீவியத்தின் விருப்பமற்ற அனுபவங்கள் எல்லாவற்றிலும் வெள்ளிக் கோடாக இருப்பதாக. இதுவே, நம்முடைய அனுபவங்களின் தொடக்கமாகவும், நடுவாகவும், முடிவாகவும் இருப்பதாக. நாம் உபத்திரவத்தில் பொறுமையாக இருக்கும்படியாக ஊக்கப் படுத்தப்படுகிறோம். வலிமையான குணமுள்ளவர்களாக, எவ்வாறாக வென்றால், தடைகள் மத்தியிலும், உறுதியாக நிற்பதன் மூல–மாக அவைகளை மகிழ்ச்சியுடன் தாங்கி சகித்து கொண்டு, தொடர்ந்து அதில் முன்னேறி, நன்மை செய்வதில் சுயகட்டுப்பாட்டை வலிமைப்படுத்துகிறவர்களாக இருப்போமாக.

## "உபத்திரவத்தில் பொறுமையாயிருத்தல்"

நம்முடைய பாட தலைப்பு வசனத்தின் இரண்டாவது பாகம் "**உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்**" என்பதாகும். Tribulo என்னும் இலத்தீன் வார்த்தை கோதுமையை ஒரு கருவியினால் (Pestle) மாவாக்குவதற்கு பயன்படுத்தக் கூடிய ஒரு பெரிய அரைக்கும் கருவியைக் (Mortor) குறிக்கிறது. ஒரு மருந்து தயாரிப்பாளர் அவருடைய மருந்துகளை உடைத்து தூளாக்குவதற்கு, இந்த கருவி பயன்படுத்தப்படுகிறது என்ற குறிப்பு உள்ளது. அதே மாதிரியாக, ஜீவியத்தில் அதே போன்ற அனுபவத்திற்குள் நாம் கடந்து செல்லும்படியாக கர்த்தர் நம்மையும் இந்த உரல் போன்ற அரைக்கும் கருவிக்குள் போடுகிறார். ஏமாற்றங்கள், தாமதங்கள், பிரியமானவர்களிடமிருந்து பிரிந்திருத்தல், துன்புறுத்தல்கள், ஏழ்மை, கஷ்டங்கள், எதிர்ப்புகள், சகோதரர்களோடு வரும் கஷ்ட அனுபவங்கள், நாம் நேசிக்கிறவர்களிமிருந்து வரும் இன்னல்கள் போன்ற இப்படிப்பட்ட சூழ்நிலைகளாகிய இந்த காரியங்கள் தான் உபத்திரவங்கள் ஆகும். அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு நம்மை கொண்டு செல்லும் சூழ்நிலை–களும், அவை நமக்குள் செயல்படும் செயல்முறையும் தான் நமது உபத்திரவப் பயிற்சி (Tribulotsto) ஆகும்.

பிரதிஷ்டை செய்துள்ள தேவனுடைய பிள்ளைகளாக, நாம் உபத்திரவத்தில் பொறுமையாக இருக்க வேண்டும். இந்தக் குழப்பம், ஓரளவு வரை புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பாளர்களால் ஏற்பட்டது. ஆங்கிலத்தில் உள்ளது போலவே, கிரேக்க மொழியிலும் இரண்டு வார்த்தைகளால் சுட்டிக் காட்டப்படுகிற கருத்துக்களுக்கு இரண்டு வேறுபட்ட அர்த்தம் தரும் வார்த்தைகள் உள்ளன. கிரேக்க வார்த்தையான

Makrothumia என்பதற்கு நீடிய சகிப்பு - Long suffering என்றும், கிரேக்க வார்த்தையான hupomone என்பதற்கு பொறுமை – Patience என்றும் அர்த்தமாகும். சில நேரங்களில் மொழிபெயர்ப்பாளர்கள் Hupomone என்ற வார்த்தையை நீடிய பொறுமை என்றும், சில நேரங்களில் Makro thumia என்ற கிரேக்க வார்த்தையை பொறுமை என்றும் மொழிபெயர்த்துள்ளனர். இதனால், வேதாகமத்தை வாசிக்கும் ஒரு சராசரியான நபருக்கு இந்த இரண்டு வார்த்தைகளின் சரியான அர்த்தங்களில் சற்றேறக்குறைய குழப்பம் ஏற்படுகிறது.

அப்படியானால், இந்த இரண்டு வார்த்தைகளின் அர்த்தங்களுக்கு இடையே உள்ள வித்தியாசம் என்ன? அவைகளைப் பற்றிய சுருக்கமான விளக்கம், இந்த விஷயத்தை நாம் புரிந்துக் கொள்வதற்கு நமக்கு உதவியாக இருக்கும். நீடிய சகிப்பு (Long suffering) என்பது, எரிச்சலூட்டும் சூழ்நிலைகள் மத்தியிலும் அமைதியாக, வெறுப்பு/ கோபம் கொள்ளாமல் தன்னை நடத்திக்கொள்ளும் நிலையாகும். இதைத்தான் நாம் இரண்டாம் நிலை கிருபை என்று அழைக்கிறோம். அதாவது உயர்நிலை ஆதாரக் கிருபைகளானது, கீழ்நிலை ஆதாரக் கிருபைகள் நம்மைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை அடக்குவதன் பலனாக உருவாக்கப்பட்ட ஒரு கிருபையாகும். பொறுமை என்பது ஒரு வலிமையான குணம் – எவ்வாறாகவென்றால், தடைகள் மத்தியிலும், உறுதியாக இருப்பதன் மூலமாக, அவைகளை சந்தோஷமாக சகித்துக் கொண்டு, ஒருவன் அதில் தொடர்ந்து முன்னேறி, நன்மை செய்வதில் சுய கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதாகும். பொறுமை (Patience) என்பது திட்டவட்டமாக, நீடிய சகிப்பை விட மிக முக்கியமான கிருபை என்பதை இந்த விளக்கங்களிலிருந்து நாம் கண்டு கொள்கிறோம். இது ஆதாரக் கிருபை மட்டுமல்லாமல், இது உயர்நிலை, ஆதிக்கம் செலுத்துகிற ஆதாரக் கிருபையுமாக இருக்கிறது.

## வேதாகம நிரூபணம்


மேலும் நம்முடைய பாடத்தைப் பற்றி விவாதிக்கும் முன்பு, சற்று நிறுத்தி, பொறுமை என்பது மாறாத தன்மையும், கருத்தும், செயல்திறனில் நிலையாக இருப்பதும், உறுதியான தன்மை உடையதாயிருத்தலின் மையக்கருத்தாய் இருக்கிறது என்பதை வேதாகமத்திலிருந்து நிரூபிக்க நாங்கள் விரும்புகிறோம். "**முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்**" (மத். 10:22). பொறுமை, விடா முயற்சி ஆகிய கருத்துக்கள் இந்த வசனத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. டயக்ளாட் மொழிபெயர்ப்பு, மிகவும் பொருத்தமாக, இந்த வசனத்தை இவ்வாறு தருகிறது. "முடிவு பரியந்தம் பொறுமையுடன் தாங்கிக் கொள்பவனே இரட்சிக்கப்படுவான்." திட்டவட்டமாக, இதுதான் இந்த வசனத்தின் கருத்தாகும். சகிப்புத்தன்மை மட்டும் உள்ளவர்களாயிருந்தால், அது போதாது. முடிவுவரை சகிப்புத்தன்மை உள்ளவர்களாயிருப்பது மட்டும், நம்மை ஜெயம் பெற்றவர்களாகச் செய்வதில்லை. ஏனெனில், நம்மை ஜெயம் பெற்றவர்களாகச் செய்வதற்கு, சுறுசுறுப்பான செயல்பாடும், அதே போல எதிர்ப்பில்லாத தாங்கிக் கொள்ளுதலும் உள்ளதாக அது இருக்க வேண்டும். "**முடிவுபரியந்தம் பொறுமையுடன் தாங்கி நிலைத்திருப்பவனே** (நன்மை செய்வதில்) **இரட்சிக்கப் படுவான்.**"

ரோமர் 2:7 வசனமும், அதே போல பொறுமைக்குரிய அர்த்தத்தின் மீது வெளிச்சம் தருகிறது. "**சோர்ந்து போகாமல்** (Patient Continuance-பொறுமையுடன்தொடர்ந்து) **நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும், கனத்தை, அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்.**" ஆங்கில வேதாகமம் பார்க்கவும். அவர் நித்திய ஜீவனை அளிப்பார். Hupomone, பொறுமை என்கிற கிரேக்க வார்த்தைக்கு அர்த்தம் தருவதற்காகத் தான் மொழிபெயர்ப்பாளர்களால், "பொறுமையுடன் தொடர்ந்து" என்கிற அர்த்தம் தரும் இரண்டு ஆங்கில வார்த்தைகள் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. "Patient Continuance" என்ற ஆங்கில வார்த்தைகளை பயன்படுத்திய போது, மொழிபெயர்ப்பாளர்கள், தீமையை மகிழ்ச்சியுடன் சகித்துக் கொள்ளும் உறுதியும், தீமைக்குப் பதிலாக, நன்மை செய்வதில் உறுதியாக இருக்கும் கருத்தையும் தங்கள் மனதில் கொண்டிருந்தார்கள். அதனால் தான் Continuance என்ற வார்த்தைக்கு முன்பு Patient என்ற பெயர் உரிச்சொல்லை பயன்படுத்தி ருக்கிறார்கள். நன்மை செய்வதில், தளராத உறுதியும், விடா முயற்சியும், நிலையான தன்மையும் உள்ளவர் எவரும் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பார். மற்றவர்கள் எவரும் பிரவேசிப்பதில்லை. ஆகவே திட்டவட்டமாக வேறு எந்த விளக்கமும், இந்தப் பத்தியிலுள்ள வார்த்தைக்குப் பொருத்தமான விளக்கமாக இருக்காது. ஆகவே நன்மை செய்வதில் விடாமுயற்சியுடன் இருப்பது மட்டுமே நித்திய ஜீவனைப் பெறுவதற்கு ஒருவனைத் தகுதிப்படுத்துகிறது.

"**நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்கும்** (சுதந்தரித்துக் கொள்ளும் படிக்கு) **பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.**" எபி. 10:36. நாம் இன்னொரு வேத வசனத்தை ஆராய்ந்து பார்ப்போம். யாக்கோபு 1:2-4. "**என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.**" செயல்பாட்டில் இருக்கும்படி அனுமதிக்கப்பட்டால், பொறுமை என்ன செய்யும் என்று பின்வரும் வார்த்தைகளில் அவர் சொல்லுகிறதைக் கவனித்துப் பார்ப்போமாக. "**பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.**" பொறுமையானது பூரண கிரியை செய்யும்போது, அதனால் என்ன நிறைவேற்றப்படுகிறது? அவர் பின்வருமாறு இவ்வாறாகக் கூறுகிறார். "**நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல் இருதயத்திலும், மனதிலும், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருப்பீர்கள்.**"

## பொறுமை என்றால் விடாமுயற்சி என்று அர்த்தம்

ஆகவே, பொறுமை என்றால் செயல்திறனில் உறுதி, தொடர்ச்சி, விடாமுயற்சி, தடைகள் இருந்தபோதிலும் அவைகளை சந்தோஷத்துடன் தாங்கிக் கொண்டு நன்மை செய்தல் என்று அர்த்தமாகும். பொறுமை சரியான திசையை நோக்கிச் செல்லும், தீமை செய்வதை நோக்கி அல்ல.




நன்மை செய்வதை நோக்கியே ஆகும். நீங்கள் பொறுமைக்காக ஜெபிக்கும் போது, நீங்கள் உபத்திரவத்திற்காக ஜெபிக்கிறீர்கள்; ஆனால் பிறகு உங்களுடைய ஜெபங்களுக்கான பதிலை விட்டு, ஏன் நீங்கள் ஓடுகிறீர்கள் என்று ஒருவர் முன்னொருமுறை ஞானமாகக் கூறினார். அப்படியானால், நம் பாட வசனத்தில் சொல்லப்பட்டுள்ள புத்திமதி என்னவெனில், உபத்திரவங்களின் கீழும் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும் என்பதாகும். ஒவ்வொரு தாக்குதல் அடியையும் அளவிடுபவர் தேவன் ஒருவரே. அவரே எல்லாவற்றையும் திட்டமிடுகிறார்; பிரதிஷ்டை செய்துள்ள அவருடைய பிள்ளைகளின் ஜீவியத்தில் தற்செயலான நிகழ்வுகள் எதுவும் நடப்பதில்லை என்பதை அறிந்துக் கொள்வது நல்லது.

சில நேரங்களில் நாம் நமக்கு நேரிட்ட உபத்திரவங்களுக்காக பிசாசையும், நம்மைச் சுற்றியுள்ள ஜனங்களையும் குற்றஞ் சுமத்துகிறோம்; ஆனால் அப்படிப்பட்ட அதிக பாராட்டை அவர்களுக்குக் கொடுக்காதீர்கள். அவர்கள் இதை நமக்கு தீங்கு நேரிடுவதற்காக செய்கிறார்கள்; ஆனால், தேவன் அதை நம்முடைய நன்மைக்காக மாற்றுகிறார். அவர் ஒருவர் மட்டுமே ஒவ்வொரு தாக்குதலையும், அடியையும் நம்முடைய சிறந்த நன்மைக்காக என்று பிரித்துப் பார்க்கிறார். இந்த எண்ணத்தை நாம் மனதில் வைத்துக் கொண்டால் மட்டுமே, அடியை தரும் அந்த கரங்களை நாம் முத்தஞ் செய்து, "**ஆம் பிதாவே, நீர் எல்லாவற்றையும் நன்மைக்காகவே செய்கிறீர்!**", "எங்களுக்கு நீர் காட்டுகிற கிருபைக்காக, நாங்கள் உம்மை துதிக்கிறோம்!" என்று சொல்ல முடியும். "எல்லாம் முடிந்து விட்டது, நான் இப்போது கைவிடுகிறேன்" என்று நாம் சொல்லுகிறவர்களாயிருக்கக்கூடாது. மாறாக நாம் சரியான வழியைத் தெரிந்து கொண்டு, தடைகளினூடாக நம்முடைய வழியை மோதியடித்துக் கொண்டு, அவைகளை மகிழ்ச்சியுடன் தாங்கி சகித்துக் கொள்ள வேண்டும். இந்த மாபெரும் நம்பிக்கையே இதைச் செய்ய நமக்கு உதவும். ஆகவே, நாம் சுகவீனமாகிவிட்டாலோ, நண்பர்கள் நம்மை விட்டு திரும்பிச் சென்று விட்டாலோ, இறுதியில் நாம் எல்லாவற்றையும் இழக்க வேண்டியிருந்தாலோ, நாம் சோர்ந்து போகாதிருப்போமாக. நாம் இதை கர்த்தருக்காக உபயோகித்தால் மட்டுமே, நாம் மகிழ்ச்சியடைவதற்கு போதுமான காரணத்தைப் பெற்றவர்களாக இருப்போம்; அதுவே நமக்கு உதவிகரமாக இருக்கும். நாம் இதைச் செய்யும் போது, தேவனால் நாம் அங்கீகரிக்கப்படுகிறோம் என்ற உணர்வு, நாம் ஜெயம் பெறுவதற்கான நம்பிக்கையை இன்னும் அதிக வலுவானதாக ஆக்கும். ஏனெனில், இந்த உணர்வு இல்லையெனில் அது நிச்சயமாக ஒரு ஏமாற்றமாக இருக்கும். "***கடைசியாக என் சகோதரரே கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.***" (எபே. 6:10).

தேவன் பிரதிஷ்டை செய்துள்ள தம்முடைய பிள்ளைகளுக்கு உபத்திரவங்களை அனுமதிக்கிறார்; அவைகள் நம்முடைய நம்பிக்கைகளை நிறைவேற்றுவதற்காக நம்மைத் தயார்படுத்தும் படிகளாக மாறுவதுடன், பொறுமையைப் பயிற்சி செய்யவும் அவைகள் அழைக்கின்றன. நம்முடைய உபத்திரவங்களைப் பற்றி எண்ணி செயல்படும் போது நாம் தளர்ந்து விடாமல், நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள அந்த மகிமையான நம்பிக்கைக்கு, மகிழ்ச்சியான நிலைப்பாட்டுடன், விடாமுயற்சியுடன் நோக்கிப் பார்க்க வேண்டும். பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது; மகிமையான நம்பிக்கை நம்முடையதா கட்டும். அப்போஸ்தலர் பவுலின் வார்த்தையின்படி, "***முந்தின நாட்களை நினைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே.***" (எபி. 10:32).

## ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருங்கள்

நம்முடைய பாட தலைப்பு வசனத்தின் மூன்றாவது பாகம், "**ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்**" என்பதாகும். ஜெபமானது பேசியோ அல்லது பேசாமலோ தேவன் நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிற நற்காரியங்களுக்காக, அவரிடம் செல்லும் இருதயத்தின் உண்மையான விருப்பமாகும். அது இருதயத்தின் உண்மையான விருப்பமாகும். தேவன் நம்மை ஜெபிக்கும்படியாக அழைத்திருக்கிறார். நாம் தேவனுடைய சித்தத்துக்கு இசைவாக வேண்டிக் கொண்டால், நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நம்முடைய தேவைகளும், தேவனுடைய தாராளமாகக் கொடுக்கும் குணமும் நம்மை ஜெபிப்பதற்குத் தூண்ட வேண்டும்; ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதமோ ஜெபித்து விட்டு, பின்பு விட்டுவிடுவது அல்ல, மாறாக, இடைவிடாமல் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். இது, நாம் எப்படி இடைவிடாமல் தொடர்ந்து ஜெபிப்பது? என்ற கேள்வியை இயற்கையாகவே முன்னே கொண்டு வருகிறது. சொல்லி வெளிப்படுத்த முடியாத அந்த விருப்பத்தை, எல்லா நேரத்திலும் நம் இருதயங்களில் வைத்துக் கொள்வதன் மூலமாகவே ஆகும்.

சில நேரங்களில் தேவன், நம்முடைய ஜெபத்துக்கு பதிலளிப்பதற்கு முன்பாக நீண்ட காலம் நம்மைக் காத்திருக்கச் செய்வார். நம்முடைய வேண்டுதல்களுக்குப் பதிலளிக்கப்படும் வரை, நாம் எப்படி நம்முடைய வேண்டுதல்களில் தரித்திருக்க வேண்டும் என்பதை ஓர் ஏழையான விதவையைப் பற்றிய உவமை காட்டுகிறது. நாம் நம்முடைய ஜெபத்திற்கு பதிலைப் பெறுவதற்கு தயாராவது வரை அல்லது நம்முடன் தொடர்பில் உள்ள யாராவது ஒருவர் ஜெபத்திற்குப் பதிலளிக்கப்படுவதற்கு ஏற்ற முறையில் தயாராகும் வரை, தேவன் ஜெபத்திற்கு பதலளிப்பதை நிறுத்தி வைக்கக் கூடும். ஏற்ற முறையிலான ஜெபம் எப்பொழுதுமே பதிலளிக்கப் படாமல் இருப்பதில்லை. "**நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும்.**" (யோவான் 15:7). நம்முடைய விண்ணப்பங்கள் அவருடைய சித்தத்திற்கு இசைவாகவும், நீண்ட காலம் தாமதித்த போதிலும், பதிலைப் பெற்றுக் கொள்வோம் என்பதில் முழு நிச்சயத்துடனும் இருப்ப

தாக. சில நேரங்களில், நாம் கேட்கக் கூடாத காரியங்களுக்காக விண்ணப்பம் செய்கிறோம். சில நேரங்களில் தேவன் "இல்லை" என்று பதிலளிக்கிறார். ஆனால் நாம் எப்பொழுதுமே ஓர் பதிலைப் பெறுகிறோம்! கர்த்தருக்குப் பிரியமில்லாதது என்று நீங்கள் ஏற்றுக் கொள்கிற சில குணப் பண்புகளை மேற்கொள்வதற்காக இந்த வருடம் மற்றும் கடந்த வருடத்தில் ஜெபித்திருக்கிறீர்களா? தொடர்ந்து ஜெபியுங்கள். நீண்ட தாமதமாகிய குளிர்காலம் நம்மைக் கடுமையாகப் பயமுறுத்தலாம், ஆனால் வசந்த காலமாகிய பதில் நிச்சயமாகவே வருகிறதாயிருக்கிறது. நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிற இந்த விருப்பமான காரியங்களிலும், இந்த ஆர்வமான வேண்டுதல்களிலும் விடாமுயற்சியுடன் இருப்போமாக. பின்பு, நம்முடைய ஜெபங்களுக்குப் பதில்கள் சில நேரங்களில் சில வருடங்களுக்குப் பிந்தினாலும், கண்டிப்பாகப் பதிலளிக்கப்படும். ***

# வேதாகமத்தைப் புரிந்து கொள்வது எப்படி?

How to Understand the Bible?

ஜனங்களில் அநேகர் தங்கள் வீடுகளில் வேதாகமத்தை வைத்திருக்கிறார்கள்; ஞாயிற்றுக்கிழமைகளில் சிலர் அதனை ஆலயத்துக்குக் கொண்டு செல்கிறார்கள், அநேகமாக வெளிப்புறமாக காட்டிக் கொள்கிற விஷயத்திற்காகவே சில சமயங்களில் அதனை ஒரு பொருளாகக் கருதி, தங்களை தீமைக்கு எதிராக பாதுகாக்கும்படியான மந்திர சக்தியுள்ளதாக அல்லது தாயத்து போன்றதாகவோ நம்புகிறார்கள். இது ஒரு கேள்வியை எழுப்புகிறது; எத்தனை பேர் அதை வாசிப்பதிலும், அதை ஆராய்ந்து பார்ப்பதிலும், உண்மையில் அதனை கவனத்துடனும், பாரபட்சமின்றியும் படிப்பதிலும் அதிக நேரத்தை செலவிடுகிறார்கள்?

என்னுடைய குடும்ப அமைப்புக்குள், என் தாயார், தன்னுடைய மாமா டால்மஸ் என்பவரைப் பற்றி கூறுவார். அவர் வீட்டை விட்டு வெளியே வருகையில், தன்னுடைய மனைவி மற்றும் பிள்ளைகள் தனக்குப் பின்னாக சற்று தூரத்தில் வந்து கொண்டிருப்பார்கள்; அவர் பெருமையுடன் வேதாகமத்தை கையில் ஏந்தி நடந்து செல்வார் என்பதாகச் சொல்வார்கள். இது Dutch Reformed Church-க்கு செல்பவர்களுடைய பொதுவான பழக்கமாக இருந்தது. அவருடைய இந்த காட்சி நடைமுறையை "மயிலைப் போல பெருமை" என்ற பதத்தால் குறிப்பிடலாம்.

பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில், நாம் செய்யும்படி கர்த்தரால் நமக்குக் கொடுக்கப்பட்ட வேலையை சரியாக அபிவிருத்தி செய்து நிறைவேற்றிட, நாம் மாம்சத்தை மேற்கொள்ளுவதற்கான பெலத்திற்காகவும், நம்மையே நாம் எப்படி கையாள்வது என்று அறிந்துக் கொள்ளும் ஞானத்திற்காகவும், குணாதிசயங்கள் பலப்படுவதற்காகவும், பரிசுத்தாவியின் கனிகள் மற்றும் கிருபைகளின் வளர்ச்சிக்காகவும் ஜெபிக்க வேண்டும். நாம் ஆவிக்குரிய ஆகாரத்துக்காகவும், நம்முடைய வஸ்திரங்களை உலகத்தனத்திலிருந்து விலக்கி சுத்தமாக வைத்துக் கொள்ள கிருபைக்காகவும், ஞானத்திற்காகவும், தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை அணிந்துக் கொள்ளவும் நாம் ஜெபிக்க வேண்டும். நாம் தேவனுடைய வார்த்தையை எப்படி புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதைக் குறித்தும், சத்திய ஆவியை எப்படி மதித்துணர்ந்து பாராட்ட வேண்டும் என்பதற்கான ஞானத்துக்காகவும் கேட்டுக் கொள்ள வேண்டும்.

வேதாகமம் மிகவும் ஆழமானதாகவும், சராசரி மனிதன் புரிந்துக் கொள்வதற்கு மிகவும் கடினமானதாகவும் இருப்பதாகச் சொல்லப்படுவதை அநேகந்தரம் ஒருவர் கேட்டிருக்கலாம். அப்படிப்பட்ட காரணம் பல நேரங்களில் அதை படிப்பதில் சோம்பேறித்தனத்திற்கு அல்லது அதை படிக்காமல் இருப்பதற்குக் காரணமாக சொல்லப்படுகிறது. அல்லாமலும் அநேக முரண்பாடான பேர்க்கிறிஸ்தவ மத நம்பிக்கைக் கொள்கைகள் மற்றும் பல்வேறான சபை பிரிவினரின் தலைமைகள், பிரசங்கிமார்கள் மற்றும் வேதாகமம் உண்மையில் என்ன போதிக்கிறது என்று எழுதுகிறவர்களிடையேயான கருத்து வேறுபாடுகள் காரணமாக சிலர் அதைப் படிப்பதற்கு ஊக்கமிழந்து போகிறார்கள்; அதிகமாக கற்றுத் தேர்ந்த பல்வேறான இறையியல் வல்லுநர்கள் இதற்கு தீர்வு காணவும், இதன் சரியான அர்த்தத்தைக் கண்டு பிடித்து, ஒருமித்த கருத்திற்கு வர முடியவில்லையெனில், தாங்களும் அதை புரிந்துக் கொள்வதற்கு நம்பிக்கை மிகக்குறைவாக உள்ளது என்பதாக அவர்கள் எண்ணுகிறார்கள். மற்றவர்கள் தேவனுடைய வார்த்தையில் அடங்கியிருக்கும் அவருடைய ஞானத்தைப் பற்றி படிப்பதற்கு அக்கறை கொள்வதில்லை, ஏனெனில் அவர்கள் மாறுபாடுள்ளவர்களாக, பூலோக சம்பத்தையும், மேன்மைகளையும் தேடிப் போகிறவர்களாகவும், பெரும்பாலும், "**தேவப் பிரியராயிராமல், சுகபோகப் பிரியராயும் இருக்கிறார்கள்.**" (2 தீமோ. 3:4).

ஆயினும் சர்வ ஞானமும், சர்வ நீதியும், சர்வ அன்பும், சர்வ வல்லமையும் கொண்ட சிருஷ்டிகரை நாம் அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும், அவர் தம்முடைய மானிட சிருஷ்டிகளுக்கு எழுதப்பட்ட வெளிப்பாட்டை புரிந்து கொள்ளக் கூடிய திறனைக் கொடுத்திருப்பதுடன், நிச்சயமாகவே அவர்களுக்கு தம்முடைய நோக்கங்கள் மற்றும் அவர்களுக்கான திட்டங்கள் பற்றி அப்படிப்பட்ட சில வெளிப்பாட்டையும் ஏற்படுத்தித் தருவார். உலகத்திலே இருக்கும் மிகப் பழமையான புஸ்தகமாயிருக்கிற வேதாகமம், அந்த வெளிப்பாடாக இருப்பதாகக் கோருகிறது; அதனால் ஒருவன் பயபக்தியுடனும், மனத்தாழ்மையுடனும், வாஞ்சையுடனும் தன்னுடைய மகாபெரிய சிருஷ்டிகர் இவ்வாறாக அவனுக்குக் கொடுப்பதை புரிந்து கொள்ள விரும்புவானானால், அவன் "**பரத்திலிருந்து வரும் ஞானத்தைப்**" பெற்றுக் கொள்ள சரியான மனப்பான்மையில் இருக்கிறான். (யாக். 3:17). "**உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தருகிறது.**" (சங். 119:130). "**உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்: உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது: சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்கு தரிக்கப்பட்டிருக்கிறது**" (எரே. 15:16).

“**உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்.**”(யாக். 1:5,6). என் ஆத்துமா தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது, (சங். 42:1,2); அது அவருடைய ஐக்கியத்தில் சந்தோஷப்படும் (1 யோவான் 1:3), அவரோடு நெருங்கிச் சேருவதில் சந்தோஷப்படும் (யாக். 4:8), அவருடன் கூட தடையற்ற ஐக்கிய சமயங்களைக் கொண்டிருப்பதிலும் களிகூரும்; “**அவர் தம்முடைய ஜனங்களுக்கும்...... சமாதானம் கூறுவார்.**” (சங். 85:8).

மெய்யாகவே தேவனுடைய வசனத்திலுள்ள சத்தியம் இப்போது விசுவாச வகுப்பாருக்கு மட்டுமே புரிந்துக் கொள்ளும்படியாக இருக்கிறது; “**விசுவாசம் எல்லாரிடத்திலும் இல்லையே.**” (2 தெச. 3:2). “**சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்**” என்று சொல்லப்படும் காலம் இன்னும் வரவில்லை. அப்போது, கர்த்தரை அறிந்துகொள் என்று எந்த மனுஷனும் தன் அயலானுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது; “**அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**” (ஏசாயா 11:9; எரே. 31:34). தேவன் அநேக நூற்றாண்டுகளாக விசுவாச வகுப்பாரை, ஆபிரகாமையும் அவன் சந்ததியையும்/வித்தையும் (கலா. 3:8, 16, 29), கிறிஸ்துவின் ஆயிர வருட மத்தியஸ்தர் ஆட்சியின் கீழ் தெரிந்து கொள்ளப்படாத உலக மனுக்குலத்தாரை மனந்திரும்பச் செய்து ஆசீர்வதிப்பதற்காகத் தெரிந்தெடுத்து வருகிறார். அதே சமயத்தில் தேவன் தம்முடைய நோக்கங்களையும், திட்டங்களையும் (உலகப்பிரகாரமான) ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து, தம்முடைய இரகசியங்களை பாலகருக்கு வெளிப்படுத்துகிறார். (மத். 11:25). “**பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்.**” (1 பேதுரு 5:5; யாக். 4:6).

ஒருவன் தேவனிடம் வந்து, அவரைப் பற்றி கற்றுக் கொள்ள வேண்டுமானால், விசுவாசம் என்பது அடிப்படையான அவசியமாயிருக்கிறது. (யாக். 1:5,6). “**விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம், ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.**” (எபி. 11:6). ஒருவருக்கு இந்த அடிப்படையான விசுவாசம் என்னும் பண்பு இருந்தாலும் கூட, அவருடைய வார்த்தையைப் பற்றிய மெய்யான அறிவை அடையவும், அதை தக்க வைத்துக் கொள்ளவும், குறிப்பாக அவசியமாயிருக்கிற வேறு ஏழு பண்புகள் உள்ளன: மனத்தாழ்மை (மத். 11:25), சாந்தகுணம் (சங். 25:9; ஏசாயா 61:1), பயபக்தி (சங். 25:14), நீதியின் மேல் பசிதாகம் (மத். 5:6), நேர்மையும் நற்குணமும் (உண்மையும் நன்மையுமான இருதயம்) (லூக். 8:15) மற்றும் பரிசுத்தம் (எபி. 12:14) ஆகியவை ஆகும்.

விசுவாசமில்லாமல் தேவனுடைய வார்த்தையைப் படிப்பதென்பது, நமக்குப் பிரயோஜனப்படாது. (எபி. 4:2). ஒருவன் தேவையான கூடுதல் குணப்பண்புகளை பெற்றிராத வரையில் சத்தியத்தை அடையவோ, தக்க வைத்துக் கொள்ளவோ முடியாது:

**(1)** மனத்தாழ்மை அவசியமாயிருக்கிறது, ஏனெனில், இது பெருமையை அகற்றும். சுய திருப்தி, தன்னிறைவு, தற்பெருமை மற்றும் சுய கருத்து போன்ற மனோபாவங்களை ஒருவனிடமிருந்து நீக்குகிறது. இதன் மூலம் அவன் தன் சொந்த குறைபாடுகளையும், தேவன், கிறிஸ்து மற்றும் பரத்திலிருந்து வருகிற ஞானம் ஆகியவற்றின் அவசியத்தை உணர்ந்து சரியான சுயமதிப்பீட்டைக் கொண்டவனாகிறான்.

**(2)** சாந்தகுணம் அவசியமானதாக இருக்கிறது, ஏனென்றால், இது கற்றுக்கொள்ளும் தன்மையையும், மனதை வழிநடத்தும் தன்மையையும், இருதயத்தில் இணக்கமுள்ள தன்மையையும் ஏற்படுத்திக் கொடுப்பதால், அது ஒருவனை தேவனுடைய வார்த்தையின் வழிகாட்டுதல்களுக்கு திறந்த மனதையும், மறுமொழி கொடுக்கிற தன்மையையும் கொடுக்கிறது.

**(3)** பயபக்தி அத்தியாவசியமானதாக இருக்கிறது, ஏனென்றால், “**கர்த்தருக்குப் பயப்படுதலே** (பயபக்தி) **ஞானத்தின் ஆரம்பம்**”.... “அறிவின் ஆரம்பம்”... (சங். 111:10; நீதி. 1:7), மேலும் தேவன் தம்மிடத்தில் பயபக்தியாய் இருப்பவர்களுக்கு மட்டுமே தம்முடைய இரகசியத்தை வெளிப்படுத்துகிறார். (சங். 25:14).

**(4)** சத்தியம் மற்றும் நீதியின் மேல் பசிதாகமாயிருத்தல் – அவைகளுக்காக பலத்த விருப்பங்கொள்ளுதல் – சத்தியத்தையும் அதன் ஆவியையும் அடைந்து கொள்ளும் வழியில் ஏற்படும் தடைகளை மேற்கொள்ள இவைகளுக்கான அவனது அன்பை போதுமான அளவு பலப்படுத்த அது அவசியமானதாய் இருக்கிறது.

**(5)** இருதயத்திலும் மனதிலும் நேர்மை அவசியமாயிருக்கிறது, தேவனுடைய வார்த்தை பற்றிய போதனைகளை உண்மை என ஒப்புக் கொள்வதற்கு இது அவசியமாயிருக்கிறது. ஏனெனில், நேர்மையற்ற இருதயம் சத்தியத்திற்கு எதிராக இயல்பாகவே தாக்குதலை ஏற்படுத்துகிறது, அதே சமயம் நேர்மையான இருதயம் சத்தியத்திற்கான நாட்டத்தைக் கொண்டிருக்கிறது.

**(6)** இருதயத்தில் நற்குணம் அவசியமாயிருக்கிறது, ஏனெனில், ஒரே மாதிரியானவை ஒன்றையொன்று ஈர்க்கும் என்பதால், நல்ல இருதயம் நன்மையானதற்கு நேராய் ஈர்க்கப்படுவதுடன், சத்தியமானது தேவனுடைய நற்குணத்தின் வெளிப்பாடாய் இருப்பதால் நல்ல இருதயம் இயல்பாகவே அதனை சரியாக உணர்ந்து பாராட்டுகிறது.

**(7)** இறுதியாக பரிசுத்தம், பொதுவானவை மற்றும் சாதாரணமானவையிலிருந்து தனியாக பிரித்தெடுத்தலும், சத்தியம் மற்றும் நீதிக்கு அர்ப்பணித்தலும் அவசியமாயிருக்கிறது.

தேவனால் அங்கீகரிக்கப்பட்ட முறையான வேத ஆராய்ச்சி மூலமாக திட்டமிடப்பட்ட ஆசீர்வாதத்தை ஒருவன் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், இத்தகைய இருதயம் மற்றும் மனதின் பண்புகள் அவசியமாயிருக்கின்றன. மேலும், ஆரம்பத்தில் சத்தியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மட்டும் இப்படிப்பட்ட பண்புகள் அவசியமாயிருக்கிறது

என்பதல்ல. ஆனால் அதை பெற்றுக் கொண்ட பின்னரும், அதனை மேலும் தொடர்ந்தேர்ச்சியாய் காலத்துக்கேற்ற–வைகளை பெற்றுக் கொள்ளவும், அதைப் புரிந்துக் கொள்ள–வும், அதை தக்கவைத்துக் கொள்ளவும் இந்த பண்புகள் அவசியமாயிருக்கின்றன. வேதத்தை அஸ்திபாரமாகக் கொண்ட இந்த பண்புகளின் அடிப்படையில் நம்முடைய கர்த்தர் தமது மலை பிரசங்கத்தில், நாம் கேட்போமானால், பெற்றுக் கொள்வோம் என்றும், நாம் தேடுவோமானால் கண்டடைவோம் என்றும், நாம் தட்டுவோமானால் நமக்கு திறக்கப்படும் என்றும் உறுதிப்படுத்துகிறார். (மத். 7:7). மேலும் இப்போது சுவிசேஷ யுகத்தின் முடிவில், விசுவாச யுகத்தில், பெயர்ச்சபையின் லவோதிக்கேயா காலக்கட்டத்தின் இறுதியில் (இந்த அமைப்பை அவர் இப்போது புறக்கணித்து, தம்முடைய வாயினின்று வாந்தி பண்ணிப் போட்டார் - வெளி. 3:14-16, அவர் (வெளி. 3:20): "**இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன்: ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்**" என்கிறார். எனவே, நம்முடைய இருதயங்கள் மற்றும் மனங்களின் வாசல்களை அகல–மாகத் திறந்து வைத்து, அவர் நம்முடனும், நாம் அவருடனும் போஜனம் பண்ணும்படியாக அவரை வரவழைப்போமாக.

## தேவனுடைய திட்டம் ஒழுங்கானதும், நியாயமானதும், நடைமுறைக்கு சாத்தியமானதுமாயிருக்கிறது

தேவனுடைய வார்த்தையைப் படிப்பதற்கு பயபக்தியுடன் அணுகுவதில் நாம் அதன் ஆக்கியோன் ஒழுங்குகளின் தேவன் என்பதை கண்டறிந்து கொள்ள வேண்டும். வேதாகமத்திற்கு நண்பர்களாயிருக்கும் அநேகர், அது ஒழுங்கான அமைப்பிலான சத்தியத்தைக் கொண்டிருக்கிறது என்று மதிப்பிடுவதற்குப் பதிலாக, உண்மை சம்பவங்கள், நல்லொழுக்க புத்திமதிகள், கட்டளைகள் மற்றும் வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றின் ஒரு தொகுப்பாகவும், அவை சரியாக ஒழுங்கமைக்கப்பட முடியாதவையாகவும் இருப்பதாக அதைக் கருதுகிறார்கள். அப்படிப்பட்ட ஜனங்கள் பலவீனமுள்ளவர்களாகவும், ஊசலாடுகிறவர்களாகவும் இருப்பதற்குப் பொருத்தமானவர்களாக இருப்பதுடன், தப்பறையாளர்கள் மற்றும் அவிசுவாசிகளின் தயவின் கீழிருக்கிறார்கள்.

தேவனைப் பற்றி நாம் அறிந்திருக்கிற யாவும், எல்லா வகையிலும் தர்க்கரீதியாகவும், யதார்த்தமாகவும் மற்றும் ஒழுங்காகவும் இருப்பதாக அவரைக் காட்டுகிறது. அவருடைய மகாபெரிய சிருஷ்டிப்பின் வேலையில் இருந்ததுபோல, – "**அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது**" (ஆதி. 1:31); ஆகையால் ஆதாமுக்கும், அவன் சந்ததிக்குமான அவருடைய மகாபெரிய இரட்சிப்பின் திட்டத்திலும் கூட சகலமும் முழுமையாய் நிறைவேற்றப்படுவதற்கு பூரணமாக ஆயத்தப்படுத்தப்பட்டு பூரண ஒழுங்கிலிருக்கிறது. மேலும் அவருடைய வார்த்தையைக் குறித்து தேவன் அறிவிப்பதாவது: "**அது வெறுமையாய் என்னிடத்திற்கு திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.**" (ஏசாயா 55:11).

வேதாகமத்தில் அவிசுவாசியாயிருக்கிற ஒரு துணி–வுள்ள ஒருவன் தன்னுடைய "இயற்கையென்னும் கடவுளில்" பிரமாணமும், ஒழுங்குகளும் உள் அடங்கியிருப்பதாக காணலாம். அவன் வானசாஸ்திரம், மண்ணியல், உயிரியல், வேதியியல் மற்றும் பிற வகை அறிவியல்களில் ஒழுங்கை காண்கிறான், ஆனால் வேதாகமத்திலோ குழப்பதை மட்டுமே காண்கிறான். மேலும், தேவனுடைய கிரியைகள் ஒழுங்காகவும், இசைவிணக்கமாகவும் இருக்க வேண்டும் என்பதாக அவன் சரியாக நிதானிக்கிறான். அவன் அந்த அறிவியல்களின் அடிப்படைகளை அறிந்திருக்கிறவனாக, இயற்கையென்னும் புத்தகத்தை புரிந்துக் கொள்ள முடியும், ஆனால் வேதாகமத்தைப் பற்றிய திட்டத்தை பற்றி ஏதேனும் இருக்குமானால், கொஞ்சமே அறிந்திருக்கிறான். இதன் காரணமாக, அதை புரிந்துக் கொள்ளவோ, உணர்ந்து பாராட்டவோ அவனால் முடிய–வில்லை, அதனால் அதைப் புறக்கணிக்கிறான். புரிந்துக் கொள்ளப்பட முடியாதபோது குழப்பமாயிருப்பது, தெளிவாக விளக்கப்படும்போது, அழகாகவும், இசைவாகவும் ஆகிறது.

முழுமையான அறிவு அடைந்து கொள்ளப்பபாத வரை–யில், வெளிச்சத்தின் ஒவ்வொரு கதிரும் குறைந்தபட்சம் முந்தின கருத்துக்களை மாற்றியமைக்கும். எந்த அறிவியலையோ அல்லது புத்தகத்தையோ புரிந்துக் கொள்வதற்கும், அதற்குரிய சொந்த விளக்கக்கொள்கை அடிப்படையைப் பின்பற்றி அது வாசிக்கப்பட வேண்டும். "**வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளையுடையதாயிராது.**" (2 பேதுரு 1:20). தேவனுடைய வார்த்தை ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரைக்கும் (2 தீமோ. 3:16) ஒரே ஆவியின் உதவியினால் பதிவு செய்யப்பட்டு மிகச் சரியாக பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. (தேவனுடைய பரிசுத்தாவி - 1 பேதுரு 1:21; 1 கொரி. 2:10-14). வேதாகமமானது முழுமையாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், துண்டிக்கப்பட்டு பார்க்கக் கூடாது, இல்லையெனில் அது இசைவிணக்கமற்றதாய் இருக்கும். நாம் வேத வாக்கியத்தை வேத வாக்கியத்தோடு ஒப்பிடுகையிலும், வேதாகமத்தை ஒருங்கிணைந்த சாட்சியாகப் பார்க்க வேண்டும். "**தேவன் தாமே தம்முடைய வார்த்தையை விளக்குபவர், அவரே அதை வெளியரங்கமாக்குவார்.**"

தேவன் தம்முடைய ஜனங்களுக்கு தம்முடைய எழுதப்பட்ட வெளிப்பாடாக அற்புதமான புஸ்தகங்களைக் (வேதாகமத்தின் 66 புத்தகங்கள்) கொடுத்து, அவற்றை தம்முடைய ஜனங்கள் முற்றிலும் புரிந்துக் கொள்ளவே முடியாத அளவுக்கு கடினமானதாகவும், மறைபொருள் நிறைந்ததுமாய் உருவாக்குவார் என்று கருதுவது நியாயமல்ல. தேவன் உருவாக்குகிற அனைத்துமே நோக்கம் நிறைந்தவை. அவர் தமது ஆவியின் உதவியுடனும், தம்முடைய உண்மையும் உத்தமமான ஜனங்கள் கூட அதைப் புரிந்துக் கொள்ள முடியாத அளவிற்கு வேதாகமத்தின் செய்தியை மறை–பொருள் நிறைந்ததாக புலப்படாமல் செய்திருப்பாரானால், நிச்சயமாகவே அதற்கான அவரது நோக்கம் தோல்வியடைந்ததாகிவிடும்!

தேவனுடைய வார்த்தையை சரியாகப் புரிந்துக் கொள்வதற்கு, நாம் சுயத்தை வெறுமையாக்கி, நம்முடைய பேர்ச்சபை மத நம்பிக்கைக் கொள்கைகளையும், முன்–

கூட்டியே வைத்திருக்கிற அவருடைய வார்த்தைக்கு முரண்படுகிற எண்ணங்களையும் ஒரு பக்கமாக ஒதுக்கி வைக்குமளவுக்கு மனத்தாழ்மையாகவும், சாந்தமாகவும் இருக்க வேண்டியதுடன், மனுஷருடைய முரண்பாடான போதனைகளுக்கு மாறாக, அவருடைய வார்த்தையை பயபக்தியுடனும், கவனமில்லாமல் கேட்பதற்கு மாறாக சத்தியத்தின் மேல் உண்மையான பசியுடனும், எதையும் நம்புவதைத் தவிர்த்து விசுவாசத்தைப் பயிற்சி செய்ய வேண்டும். தேவனிடமாக நாம் சரியான சாந்தகுணமுள்ளவர்களாய் அவரிடம் இருந்து கற்றுக்கொள்ள வாஞ்சிக்காத பட்சத்தில், அவர் நமக்கு போதிக்க முடியாது. நாம் பூமிக்குரிய தலைவர்களுக்கும், அவர்களுடைய போதனைகளுக்கும் ஒரு சார்புடையவர்களாக இருக்கக் கூடாது; வேதாகமத்தின் எந்த மெய்யான போதனைகளுக்கும் எதிராக பாகுபாடு காட்டவும் கூடாது; நாம் அதன் போதனைகளில் சிலவற்றை ஏற்றுக் கொண்டு மற்றவைகளைப் புறக்கணிக்கக் கூடாது, நம்மை திருப்திப்படுத்தும் மற்றும் நமக்கு இஷ்டமான வசனங்களை மட்டுமே பிடித்துக் கொள்வதோ அல்லது நம்முடைய பேர்க்கிறிஸ்தவ மத நம்பிக்கைக் கொள்கைகளுக்கு ஆதரவாயிருக்கிற, தன்னிச்சையாக நாம் பயன்படுத்தக் கூடிய பிற வேதவாக்கியங்களையோ பற்றிக் கொண்டிருக்கக் கூடாது. தேவனுடைய மொத்த வார்த்தையின் சாட்சியத்தையும் ஏற்க நாம் தயாராக இல்லையெனில்–அதாவது, அதிலுள்ள சிலவற்றை மற்றவர்கள் நமக்கு கற்றுத் தந்தவற்றுடனோ அல்லது நாம் கடந்த காலத்தில் நம்பியிருந்தவற்றுடனோ ஒத்துபோகாதிருந்தாலும் அல்லது நம் விருப்பத்திற்கு ஏற்ப நம்ப வேண்டும் என்று இருந்து, முழு சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள நாம் மனதில்லாதிருப்போமானால், பின்பு நாம் தேவனைப் பற்றி கற்றுக் கொள்ள அவரிடம் வருவதற்கு ஆயத்தமாயிருக்கவில்லை என்பதே அர்த்தம்.

## தேவனுடைய வார்த்தை முழுவதும் தேவைப்படுகிறது

வேதாகமத்தை துண்டு துண்டாகப் பிரித்து விளக்கம் கூறுவது கிறிஸ்தவர்கள் மத்தியில் ஏற்படும் அதிகமான குழப்பத்திற்குக் காரணமாயிருக்கிறது. இது "வேதாகமம் ஒரு பழைய இசைக் கருவியைப் போன்றது அதில் எந்த இசையையும் மீட்டலாம்" என்ற ஆதாரமற்ற ஒரு பழமொழி உருவாவதற்குக் காரணமாயிற்று. வெகு கொஞ்சமான பேரே அதிகமாக வேதாகமத்தைப் பயன்படுத்துகிறார்கள்; மிக கொஞ்சமாக நடைமுறைக்குரிய கட்டளைகள் மட்டுமே, அத்துடன் போதுமான அளவு உபதேசம் மட்டுமே, சில குறிப்பிட்ட ஸ்தாபன நம்பிக்கைக் கொள்கையை நிரூபிக்க பெரும்பாலானோர்களால் மதிப்பிடப்படுகின்றன. ஒரு சிறிய புத்தகமே எல்லாவற்றுக்கும் போதுமானதாயிருந்திருக்கும் என்று அவர்கள் நினைப்பதால், இவ்வளவு பெரிய புத்தகத்தை கொடுத்ததற்காக அவர்கள் தேவனை பழி கூறுகிறார்கள்.

போதனை செய்யும் அநேகருடைய வழக்கம் எப்படி இருக்கிறது எனில், ஒரு வயோதிக மனிதன் தன்னுடைய திருட்டில் பவுல் அப்போஸ்தலர் அவனை சரியென நியாயப்படுத்தியதாக கோரியதைப் பார்க்கிலும் முரண்பாடு வேறு ஏதும் இல்லை. அவர் எபேசியர் 4:28-லிருந்து இதை மேற்கோள் காட்டி சொன்னதாவது: ஆங்கில வேதாகமத்தில், "Let him that stole steal" என்ற முற்பகுதியை பிரித்தால், "**திருடுகிறவன் திருடட்டும்**" என்று இப்பகுதி கூறுவதாக அமைந்துவிடும். ஆனால், அதன் மீதமுள்ள பகுதி "no more" -அதாவது "திருடாமல்" என்று இருக்கிறது. மீதமுள்ள பகுதியைச் சேர்க்காமல், பவுல் அப்போஸ்தலருடைய நோக்கத்திற்கு ஏற்றதாக முதல் பகுதியைப் பொருள் கொள்ள முடியாது. அதைப்போலவே, விசுவாசத்தால் நீதிமானாகுதலுக்கு பதிலாக, கிரியைகளினால் நீதிமானாகுதலை பரிந்துரைக்கிற ஒரு பிரசங்கி, தன்னுடைய வசனத்தை ரோமர் 4:4-ல் பின்வரும் வார்த்தைகளிலிருந்து எடுத்துக் கொள்கிறார்: "**கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி.**" ஆங்கில வேதாகமத்தில், "To him that worketh is the reward," "கிரியை செய்கிறவனுக்கு கூலி வரும்" என்றாகி விடும். இந்த பின்னனி சூழலை கவனிக்கிற எல்லாருக்கும் இவ்வசனத்தை திரித்து பயன்படுத்தியிருப்பது தெளிவாகும்.

நாம் ஒரு வசனத்தை அதன் பின்னணி சூழலைக் கவனிக்காமல் பயன்படுத்துவதைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஒரு போதனைக்கு ஆதாரமாக உபயோகிக்கப்படும் ஒரு வசனமானது, அதின் பின்னணிக்கும், அதே பாடத்திற்கு தொடர்புடைய மற்ற எல்லா வேதாகமத்தின் வசனங்களோடும் இசைவிணக்கமாக புரிந்துக் கொள்ளப் படாத பட்சத்திலும், நாம் "**சத்திய வசனத்தை நிதானமாய்** (சரியாய்) **பகுத்து போதிக்கிற**" (2 தீமோ. 2:15) விதமாய் இராத பட்சத்திலும், ஒவ்வொரு பாடத்தையும் தேவனுடைய மாபெரும் யுகங்களைப் பற்றிய திட்டத்தில் அதன் சரியான காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்றவாறு நியமிக்க தவறினால் அந்த போதனை அற்பமான மதிப்புடையதாயிருக்கும். கால்வீனியர்கள், அர்மீனியர்கள் மற்றும் யூனிவர்ஸிலிஸ்ட்கள் ஒவ்வொருவரும், தங்களுடைய கொள்கையை ஆதரிக்கும் விதமாக இருக்கும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வசனங்களையோ உடனடியாக கண்டுபிடித்து வைத்துக் கொள்கிறார்கள்; ஆனால், அவிசுவாசிகளோ இந்த மூன்று வசனங்களுமே ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது என்று சொல்லுவார்கள்.

கால்வீனியர்கள், இரட்சிப்பு அல்லது நித்திய தண்டனைக்கு ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களும் முன்குறிக்கப் படுகிறார்கள் என்ற கொள்கைக்கு சாதகமான சில வசனங்களை, உதாரணமாக, ரோமர் 8:28-30; எபே. 1:5 போன்றவைகளும், யோவான் 6:44-ல் இயேசு கூறின, "**என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்**" என்ற வார்த்தைகளையும் எடுத்துக் கொள்வார்கள். அர்மீனியர்கள் இன்னொரு பக்கத்தில், இரட்சிப்பானது எல்லாருக்கும் எல்லா இடங்களிலும் இலவசம் என்ற நம்பிக்கையைப் பிடித்து கொண்டவர்களாக "**விருப்பமுள்ளவன்**" வந்து "**ஜீவ தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்.**" (வெளி. 22:17). மேலும், இயேசு தாமே (யோவான் 12:32) "**நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்**" என்று சொன்ன வசனங்களை வலியுறுத்துவார்கள். இவர்கள் இரண்டு பேருமே இந்த விஷயத்தில் ஒருவருக்கொருவர் ஒத்துப் போகாத போதும், இந்த ஜீவியத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள் என்றும், மற்றெல்லாரும் நித்தியமாக

நம்பிக்கையின்றி இழக்கப்படுவார்கள் என்பதை ஒத்துக் கொள்வார்கள். யூனிவர்ஸலிஸ்ட்கள், எபி. 2:9; 1 தீமோ. 2:4-6 மற்றும் 1 தீமோ. 4:10 போன்ற வசனங்களோடு வந்து "**ஒவ்வொருவருக்காகவும்**" இயேசு மரணத்தை ருசிப்பார்த்-தார் என்பதால் தேவன் "எல்லா மனுஷரும் இரட்சிக்கப் படவும், அவர் தாமே எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராக இருக்கிறார்" என்று காட்டுகின்றனர். அவர்களில் ஒவ்வொருவரும், தங்கள் சொந்த சபைப் பிரிவின் மூலையில் நின்று கொண்டு, தாங்கள் விரும்பி தேர்ந்தெடுத்த வசனங்களை வைத்து தங்களை தற்காத்துக் கொள்கிறார்கள். ஒவ்வொருவரும் மற்றவர்களால் முன்னிறுத்தப்படுகிற ஆதாரமளிக்கும் வசனங்களை மேலோட்டமாக பார்த்தோ அல்லது அசட்டை செய்தோ கடந்து போவதுடன் வேதாகம சாட்சியைப் பொருட்படுத்தாமல் அதனுடன் அவன் இசைந்து போக முடியாமல் தன் சொந்த கோட்பாட்டை ஆதரிக்க நாடுகிறான்.

வேதாகமம் உண்மையானது; ஆகையால் இந்த எல்லா வசனங்களையும், தேவனுடைய வார்த்தையிலுள்ள மற்ற எல்லா வசனங்களையும், அசட்டை பண்ணாமல், மேலோட்ட மாக பார்த்து கடந்து போகாமல் அல்லது எந்த வசனத் தையும் சிறுமைப்படுத்த முற்படாமல் அவற்றை இசைவிணக் கமாக கொண்டு வர ஒரு வழி இருக்க வேண்டும். நிச்சயமாகவே தேவன் தமக்கு தாமே முரண்படுவதில்லை. ஆகையால், அவருடைய வார்த்தை சில வழிகளில் தன்னில் தானே முரண்படுவதாகத் தோன்றுமானால், அந்த தவறு அவரிடம் இல்லை, நம்மிடமே இருக்கிறது என்று நிச்சய மாகச் சொல்லலாம். தேவன் ஒரு நிலையான நோக்கத்தை யும், அதை செயல்படுத்த ஒரு நிலையான திட்டத்தையும் வைத்திருக்கிறார். தேவன், "**கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக் குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தை**" (எபே. 3:9,11) நாம் புரிந்துக் கொள்ளாத பட்சத்தில், நாம் சத்திய வசனத்தை சரியாகப் பகுத்தறியவும், அவற்றுக்குத் தொடர்புடைய யுகங் களுக்கும், காலங்களுக்கும், சமயங்களுக்கும் இந்த பல்வேறான வசனங்களைப் பயன்படுத்தவும் முடியாது. கிரேக்க மொழியில் டயக்லாட் மற்றும் ரோதர்காம் மொழி பெயர்ப்புகள் இந்த வசனத்தை தெளிவுப்படுத்துகிறது: "அபிஷேகம் பண்ணப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்காக அவர் உண்டு பண்ணின யுகங்களைப் பற்றியதோர் ஏற்பாட்டின்படி" என்று உள்ளது.

தேவன் தம்முடைய ஜனங்கள் யுகங்களை பற்றிய தம்முடைய ஏற்பாட்டைப் புரிந்துக் கொள்ளும்படி மிகுந்த விருப்பமுள்ளவராயிருப்பதால் அவர் நம்மை உதவியின்றி இருளில் தடுமாறும்படி விட்டுவிடுவதில்லை. அவர் நமக்கு பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும், பொதுவான தீர்க்க தரிசிகள் மற்றும் ஸ்விங்லி, லூத்தர், வெஸ்லி போன்ற போதகர்களையும், இவாஞ்சலிஸ்டுகளையும், உள்ளூர் போதகர்களையும், உபாத்தியாயர்களையும், கிருபையாக ஏற்படுத்தித் தந்திருக்கிறார். "**மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும், நாம் இனி குழந்தைகளாயிராமல் மனுஷருடைய சூதும், வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்**" இருப்பதற்கு இவர்களை ஏற்ப டுத்தித் தந்திருக்கிறார்.(எபேசியர் 4:11-14). இவ்வாறாக ஒவ்வொரு மனுஷனும் தனக்காக அநேக வித்தியாசமான கருத்துக்களுடன் வேதாகமத்தில் இருந்து விஷயங்களைத் தோண்டி எடுக்கும்படியாக நாம் விடப்படவில்லை. தேவன் சத்திய ஊழியக்காரர்களுக்காகவும், பொதுப் பொறுப்பிலும், உள்ளூர் சபையிலும் இரண்டிலுமே மந்தையின் "கண்-காணிகளை" ஏற்பாடு செய்திருக்கிறார். (உதாரணமாக அப். 20:17-31 கவனிக்கவும்).

## வேதாகமம் வசனங்களடங்கிய ஒரு புத்தகம்

கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட விதத்திலும், பொதுவாகவும் வேதாகமத்தை ஒரு பாட புத்தகமாக பயன்படுத்த வேண்டும் என்றும், அப்படி படிப்பதிலிருந்து சத்தியத்தை கற்றுக் கொள்ள முடியும் என்பதுமான கருத்து பரவலாக உள்ளது. இவ்வாறாக அவர்கள் வேதாகமத்தை ஒரு பாட புத்தகமாக கருதுகிறார்கள்,வசனங்களடங்கிய ஒரு புத்தகமாக அல்ல. வேதாகமமானது நிச்சயமாகவே ஒரு பாட புத்தகம் அல்ல. ஆகையால் அது அப்படியாக கையாளப்படக் கூடாது. ஒரு சிறிய எடுத்துக்காட்டு இதை தெரியப்படுத்தும். ஒரு பாடபுத் தகம் என்பது ஓர் தர்க்கம்சார்ந்த, முறையான முன்னேறும், ஒழுங்காக அமைக்கப்பட்ட பிரிவுகளிலான பாடம் கற்றுக் கொள்ளுதலுக்குரிய முறையான கட்டுரையாக இருக்கிறது. அதிலுள்ள பாடங்கள் தர்க்கரீதியாக ஒன்றிணைக்கப்பட்ட வையாகவும், முறையாகவும், படிப்படியாகவும் முழுமையான தாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன; ஒவ்வொரு சிந்தனை வரிசையும் தனித்தனியேயும், தெளிவாகவும், வேறுபடுத்தி வைக்கப்பட்டிருக்கும். அதிலுள்ள பாடங்கள் ஒவ்வொன் றிலும் எளிமையானவற்றிலிருந்து, மிக சிக்கலானவற்றிற்கு முன்னேறும் படியாகவும், அவைகளின் தொடர்பில் ஒன்று மற்றொன்றிற்கு வழிநடத்தும் படியாகவும் அமைக்கப் பட்டிருக்கும். அவை ஒருபோதும் கலந்து விடப்படுவதில்லை, மாறாக ஒவ்வொரு பாடமும் அதனதன் சரியான வரிசையில் கொடுக்கப்பட்டிருக்கும்.

சரியாக தயாரிக்கப்பட்ட பிற பாட புத்தகம் ஒவ்வொன் றிலும் இதே நடைமுறை பின்பற்றப்படுகிறது. ஆனால் வேதாகமம் அப்படியாக வரிசைப்படுத்தப்படவில்லை. வேதாகமத்தில் எந்தவொரு இடத்திலும், எந்தவொரு பாடத் தைப் பற்றிய சகலமும் ஓரிடத்தில் கொடுக்கப்படுவதில்லை, அதுவும் தர்க்க ரீதியாகவும், முன்னேற்றமான வரிசையிலும் விளக்கம் கொடுக்கப்படவில்லை. மாறாக, அது, "**இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமுமாக**" சொல்லப்பட்டிருக்கிறது. (ஏசாயா 28:10). தேவன், கிறிஸ்து, பரிசுத்தாவி, விசுவாசம், மனந்திரும்புதல், நீதிமானாகுதல், மனிதன், மீட்கும் பொருள், திரும்பக் கொடுத்தல், ஆவி, ஆத்துமா, பாவத்தின் சம்பளம், உயிர்த்தெழுதல் முதலிய இந்த தலைப்புகளுள்ள ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண்டால், இது பிற தலைப்பு பாடங்களோடு தொடர்புடையதாக, அந்த தலைப்பிலான கருத்தும் கூட பல இடங்களில் சிதறப்பட்டதாய் இன்னும் வேறு

தலைப்புகளோடு தொடர்புடையதாக, கூடவே சிறிது சிறிதாகக் கொடுக்கப்பட்டுள்ளது. தேவன் நோக்கத்துடனே தான் இந்த வழியில் ஒழுங்கமைத்திருக்கிறார். பெருமையுள்ளவர்கள், அகந்தையுள்ளவர்கள், தன்னிறைவு கொண்டவர்கள், சுய கருத்துள்ளவர்கள் மற்றும் தங்கள் சொந்த பார்வைக்கு "**ஞானிகளும் கல்விமான்களுமாய்**" இருப்பவர்களிடமிருந்து தம்முடைய இரகசியங்களை மறைக்கும்படியாகவும் "**பாலகருக்கு**" (மத். 11:25) – சாந்தகுணமும், மனத்தாழ்மையும் உள்ளவர்களுக்கும், தேவன் நியமித்த வழியில் அதாவது அவர்களுடைய அறிவுறுத்தல்களுக்காக அவர் நியமித்திருக்கிற சத்திய போதகர்கள் உதவியுடன் அவரிட மிருந்து கற்றுக் கொள்ள விருப்பம் உள்ளவர்களுக்கும் அவற்றை வெளிப்படுத்தவும், இவ்வாறாக செய்திருக்கிறார்.

வேதாகம மாணவர்களில் அநேக வகுப்பார்கள் தன்னிறைவாக எண்ணங்கொண்டு தேவன் ஏற்படுத்தித் தருகிற சத்திய ஊழியக்காரர்களைப் புறக்கணிக்கிறார்கள். அவர்கள் வேதாகமத்தை ஒரு பாட புத்தகமாக பயன்படுத்தி, அதிலிருந்து தங்களுக்கென சத்தியத்தை தோண்டி எடுக்கும்படி நாடுவதுடன், வேதாகம புஸ்தகங்களை எடுத்துக் கொண்டு அவற்றை ஒவ்வொரு அதிகாரமாகவும், ஒவ்வொரு வசனமாகவும் படிக்கிறார்கள். அவர்கள் மிக கொஞ்சமான வரம்புக்குட்பட்ட புரிதலுக்கும், அதிகமான குழப்பத்திற்கும், ஏமாற்றத்திற்கும் செல்கிறார்கள். இந்த வகுப்புகளில் உள்ள அங்கத்தினர் எண்ணிக்கைக்குத்தக்கதாகவே, பல வசனங்களுடைய அர்த்தங்களும், அவ்வளவு பல விதமான கருத்துகளாய் இருக்கின்றது. இது, வேதாகமம் ஒரு பாட புத்தகம் அல்ல என்றும், ஆனால் ஏறக்குறைய சிதறிய நிலையில், இணைக்கப்படாத துண்டுகளாக புதிராகத் தோன்றும் வசனங்கள் கொண்ட ஒரு புஸ்தகமாக இருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டுகிறது. அதைப்போலவே தன்னிறைவு எண்ணங்கொண்ட தனிப்பட்ட நபர்கள், தேவனுடைய ஊழியக்காரர்களைப் புறக்கணித்து, தங்களுக்கென வேதாகமத்தில் இருந்து சத்தியத்தை தோண்டியெடுக்க முயற்சி செய்கிறவர்கள், தப்பறையின் தீப்பொறியை பற்ற வைத்து, அந்த வெளிச்சத்தில் நடக்கிறார்கள். ஆகையினால் அப்படிப்பட்டவர்கள் "**வேதனையில் கிடப்பார்–கள்.**" (ஏசாயா 50:11). விசுவாச யுகத்தின் போது தேவன் இயேசுவின் மூலமாக விசுவாசமில்லாத மற்றும் கீழ்ப்படிதல் இல்லாத வகுப்பாரிடம் உவமைகளினாலும், கருகலான மொழியிலும் பேசுகிறார். ஏனெனில், "**அவர்களுக்கோ அருளப்படவில்லை... அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாகவும் உணர்ந்து கொள்ளாதவர்களாயும் இருக்கிறார்கள்.**" (மத். 13:10-16).

உலகத்தின் ஆயிரம் வருட நியாயத்தீர்ப்பு நாளின் போது, புத்தகங்கள் திறக்கப்பட்டு எல்லாருக்கும் சத்தியம் வெளிப்படுத்தப்படும். (வெளி. 20:12; 1 தீமோ. 2:4; ஏசாயா 11:9; எரே. 31:34); ஆனால் தேவன் இரக்கமாக இப்போது உலகத்தாரிடமிருந்து சத்திய அறிவையும், அப்படிப்பட்ட அறிவு அவர்கள் மீது கொண்டு வரப்போகிற பொறுப்புணர்–வையும், அவர்களுடைய நியாயத்தீர்ப்புக்காக அவர் நியமித்திருக்கிற நாள் வரைக்கும் கொடாமல் நிறுத்தி வைக்கிறார். (யோவான் 12:47,48; அப். 17:31) விசுவாச வகுப்பார்கள் மட்டுமே இப்போது பரீட்சையில் இருக்கின்றனர். (1 பேதுரு 4:17; 1:7).

ஏசாயா 49:11, "**என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன், என் பாதைகள் உயர்த்தப்படும்.**" இந்த வசனம் திரும்பக் கொடுத்தலுக்கு முந்தின பிரதிஷ்டை செய்த வகுப்பாரைப் பற்றி கூறுகிறது. தேவன் திரும்பக் கொடுத்தலுக்கு முந்தின ஐந்து பிரதிஷ்டை செய்த வகுப்பார்களான – சிறுமந்தை, மூப்பரான பாத்திரவான்கள், திரள்கூட்டம் வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் – முறையே சீயோன், மோரியா, அக்ரா, பெசித்தா மற்றும் ஓஃபேல் என்பதாக அடையாளப்படுத்தப் பட்ட எல்லாரையும் – பரிசுத்த பெரும் பாதையில் தெரிந்துக் கொள்ளப்படாதவர்கள் முன்னேறி வருவதற்கு உதவி செய்யும் விசேஷ கருவிகளாக ஏற்படுத்துவார். நாம் சங். 72:3-ஐ ஒப்பிடுகிறோம்: "**பர்வதங்கள் ஜனத்திற்கு சமாதானத்தைத் தரும், மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும்.**" தேவன் இந்த ஐந்து திரும்பக் கொடுத்தலுக்கு முந்தின வகுப்பார்களை இந்த நோக்கத்திற்காக மேன்மைப்படுத்துவார்.

வேதாகமத்தை பாட புத்தக முறையில் படிப்பதானது, தேவனுடைய ஜனங்கள் மத்தியில் அநேக முரண்பாடான கருத்துக்கள், அதிக குழப்பம் மற்றும் அநேக தப்பறைகளில் முடிவதாக நிரூபிக்கப்பட்டு வருவதால், உண்மையில் இது தவிர்க்கப்பட வேண்டும். இந்த நோக்கில் சிலர் வேதாகம படிப்பை ஒட்டு மொத்தமாக விட்டுவிட்டு, வேதாகமத்தை ஒருபொழுதும் புரிந்துக் கொள்ள முடியாது என்ற நம்பிக்கை–யிழப்புக்கு ஆளாகலாம். ஆனால் இது அடுத்த வரம் பெல்லைக்கு செல்வதற்குச் சமம். ஏனெனில், தேவனுடைய வார்த்தையைப் படிப்பதென்பது வேதாகமத்தில் கட்டளை–யிடப்பட்டதும், அங்கீகரிக்கப்பட்டதாயும் இருக்கிறது. (யோவான் 5:39; உபா. 29:29; சங். 1:2; ஏசாயா 8:20; எரே. 15:16; ரோமர் 15:4; 2 தீமோ. 3:15-17; வெளி. 1:3).

## வேதாகமத்தைப் படிப்பதற்கு சரியான வழி

ஆகையால் வேதாகமத்தைப் படிப்பதற்கு சரியான வழி என்னவெனில், அதை ஒரு பாடபுத்தகமாக அல்லாமல், தலைப்பு ரீதியாக, வசனங்களடங்கிய புஸ்தகமாக பயன்படுத்துவதும், சரியான புரிந்துக் கொள்ளுதலுக்கு உதவும் வகையில், பொதுவான தேவனுடைய ஜனங்களுக்காக தேவனால் நியமிக்கப்பட்ட சத்திய போதகர்களை குறிப்பாக கவனித்து நோக்க வேண்டும். இதுவே அப். 17:11-ல் அங்கீகரிக்கப்பட்ட முறையாய் இருக்கிறது (ஏசாயா 8:20; 1 தெச. 5:21; 1 யோவான் 4:1-3 வசனங்களை ஒப்பிடவும்); அங்கே பெரோயா பட்டணத்தார் தெசலோனிக்கேயரைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் என்று மெச்சப் பட்டார்கள்; ஏனெனில் அவர்கள் "மனோ வாஞ்சையாய்" அப்போஸ்தலன் பவுலினால் தங்களுக்கு பிரசங்கிக்கப்பட்ட வசனங்களுக்குச் செவி கொடுத்து காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தனர்.

அடுத்ததாக இங்கே, நம்மிடம் தெய்வீகமாய் அங்கீகரிக்கப்பட்ட வேதாகம படிப்பின் வழிமுறை இருக்கிறது:

(1) தெய்வீக முறையில் நியமிக்கப்பட்ட சத்திய போதகர் ஒருவர் மூலமாக இயேசு சத்தியத்தைப் பேசுகிறார்; புரிந்துக் கொள்வதற்கு ஏற்ற காலமாயிருக்கும் சத்திய செய்தியையும் தேவனுடைய வார்த்தையையும் விளக்குகிறார்.

**(2)** அவருடைய பிரசங்க போதனைகளுக்கு மனோ வாஞ்சையாய் செவி கொடுத்து கேட்பவர்கள் நன்கு கவனம் செலுத்துதல்.

**(3)** இந்த போதனைகள், வேதாகமத்திலிருந்து வருகிறதா என்றும், முழு வேதாகமத்துடனும் இசைவிணக்கமாக இருக்கிறதா என்றும் கண்டறிந்து கொள்ள அனுதினமும் வேத வாக்கியங்களில் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும்.

ஒவ்வொருவனும் "**தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்க** (உறுதியாயிருக்கக்)**கடவன்**" அத்துடன் "**உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும்** (பயபக்தி) **உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்.**" (ரோமர் 14:5; 1 பேதுரு 3:15).

ஏன் இது சரியான முறையிலான வேதாகம படிப்பா யிருக்கிறது? ஏனெனில் தேவனுடைய வார்த்தையின் மெய்யான விளக்கமளிப்பவரான இயேசு, பழைய ஏற்பாட்டு காலங்களில் தேவன் "தீர்க்கதரிசிகள் மூலமாய்" பேசி யதைப் போலவே (எபி. 1:1,2), புதிய ஏற்பாட்டு காலங்களில் தம்முடைய விசேஷித்த சத்திய செய்தியாளர்கள் மூலமாக காலத்திற்கேற்ற சத்தியத்தைக் கொடுக்கிறார். எனவே, முதல் விஷயம் என்னவெனில், தேவனுடைய வார்த்தையை சரியாக புரிந்து கொள்வதற்கு நாடுவதில் ஒருவர் செய்ய வேண்டியது, கர்த்தருடைய விசேஷ சத்திய செய்தியாளர்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தன்னை தொடர்புக்குள்ளாக்கி கொள்ள வேண்டும். இது அறிந்தோ அல்லது அறியாமலோ செய்யப்படலாம். பிந்தின காரியத்தில், இயேசு உண்மையுள்ள இருதயம் கொண்டவர்களை, தம்முடைய விசேஷ சத்திய செய்தியாளர்களுடன் நேரடியாகவோ அல்லது சத்திய எழுத்துக்கள் மூலமாகவோ தொடர்புக்குள்ளாக கொண்டு வரும்படியாக கையாள்கிறார். ஒரு சத்திய செய்தியானது, சாந்தகுணமுள்ள, மனத்தாழ்மையும், சத்தியத்திற்கான பசியும் கொண்டவரை, சத்திய எழுத்துக்கள் வடிவிலோ, ஒரு புத்தகமாகவோ, பத்திரிக்கை, கைப்பிரதி வாயிலாகவோ அல்லது சத்திய ஊழியக்காரரின் தனிப்பட்ட ஊழியத்தின் மூலமாகவோ சென்றடையும்.

கர்த்தர் நேரடியாக தம்முடைய ஜனங்களில் ஒவ்வொருவருக்கும், "**புஸ்தகத்தை திறக்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும்**" இல்லை என்று அநேக வேத வாக்கியங்கள் காட்டுகின்றன. (வெளி. 5:2,5). அவருடைய சரீர அங்கத்தினர்கள் ஒழுங்கான, திறமையான ஏற்பாட்டில் தகுந்த முறையில் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டார்கள். "**எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா?**" (1 கொரி. 12:29). நிச்சயமாக இல்லை. தேவன் "இப்படி சரீரத்தை அமைத்திருக்கிறார்;" ஏனெனில் "**சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது:**" "**அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால் சரீரம் எங்கே?:**" "**ஆனால் தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.**" (1 கொரி. 12:24, 14,19,18).

சுவிசேஷ யுகம் முழுவதுமாக இயேசு அடையாளமான "**ஏழு பொன் குத்து விளக்குகள் மத்தியில்**" உலாவிக் கொண்டிருக்கிறார். அதாவது, சபையின் ஏழு காலகட்டங்கள், எபேசு சபையுடன் அல்லது சபையின் வரலாற்றில் யூத அறுவடை காலகட்டத்தில் தொடங்கி, சபையின் லவோதிக்கேயா காலகட்டத்தில் முடிவடைகிறது. இந்த காலத்தில் தான் நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம், இது அவருடைய இரண்டாம் வருகையின் காலம் (வெளி. 2:1-29; 3:1-22). அவர் "**தம் வலது கரத்தில் ஏழு நட்சத்திரங்களை**" ஏந்தியிருப்பதாக சித்திரிக்கப்படுகிறார், அதை அவர் "ஏழு சபைகளின் தூதர்களாக" (தூதுவர்கள்) குறிப்பிட்டுக் காட்டி விளக்குகிறார். (வெளி. 1:16,20).

இந்த நட்சத்திரங்கள் அல்லது விளக்கைத் தாங்கி நிற்பவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட ஒரு நபரைக் காட்டிலும் அதிகமானோர்களை உள்ளடக்கியிருக்கிறார்கள். எபேசு சபை காலகட்டத்தின் நட்சத்திரம் அல்லது தூதன் (69 AD-ல் முடிந்தது) பன்னிரண்டு அப்போஸ்தலர்களைக் கொண்டது; பிலதெல்பியாவின் நட்சத்திரம் அல்லது தூதன், சபையின் சீர்திருத்த காலகட்டம், முன்போல எண்ணற்ற விசேஷித்த ஊழியக்காரர்களைக் கொண்டது. அவர்கள் மூலமாக இயேசு முக்கியமான சீர்திருத்த சத்தியங்களை முன்வைத்தார்.

கவனமாகக் குறித்துக் கொள்ளவும்: சபையின் ஏழு காலகட்டங்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்புடையதாக, இயேசு "**ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்**" என்று புத்திமதி கூறினார். (வெளி. 2:7, 11, 17, 29; 3:6, 13, 22). ஆனால் சத்தியமானது காலத்திற்கேற்றதாக ஆனபோதும், முதன் முதலில் வெளிப்படுத்துவதற்கு, ஒருமுறை கூட சபையின் பொதுவான அங்கத்தினருக்கு நேரடியாக வழங்கப்படவில்லை. அது எப்பொழுதும் அந்த காலப்பகுதியின் "**தூதனுக்கு**" "**நட்சத்திரத்திற்கு**" மட்டுமே பிரத்தியேகமாக வழங்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் "**எபேசு சபையின் தூதனுக்கு எழுதுகிறதாவது**" என்றே சொல்லப்பட்டது. (வெளி. 2:1,8,12,18; 3:1,7,14).

அப்படியானால் நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்கவும், ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையுள்ள தேவனுடைய வார்த்தையின் மூலமாக ஆதரவளிக்கப்பட்டதாக அவருடைய விசேஷ சத்திய ஊழியக்காரர்கள் மற்றும் சத்திய போதனைகளுக்கு இசைவில் இருக்கிறவர்கள் மூலமாகக் கொடுக்கப்படுகிற அவருடைய போதனைகளை மட்டுமே ஏற்றுக் கொள்ளும்படியாக நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்! "**கள்ளத் தீர்க்கதரிசிகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்**" என்றும் "**பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்**" (பரிசேயர் – சுயநீதியுடன் பாரம்பரிய உபதேசங்களுக்காக விடாப்பிடியாக வாதாடுபவர்கள், சதுசேயர் – உயிர்த்தெழுதலையும், முக்கியமான வேத உபதேசங்களையும் மறுதலிக்கிறவர்கள்) என்றும் நம்முடைய கர்த்தர் நம்மிடம் இவ்வாறாக எச்சரிக்கிறார். (மத். 7:5; 16:6). "**லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்: அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும், உலக வழிபாடுகளையும் பற்றின தேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல.**" (கொலோ. 2:8).

தப்பறையையும், தப்பறையை போதிப்பவர்களுடைய அநேக மாறுபாடுகளையும் தவிர்ப்பதற்கு நாம் இந்த ஏழு

அளவைவிதிகளை அல்லது அடிப்படை விதிகளை நம் மனதில் வைத்துக் கொள்வோமானால், சத்தியம் இன்னதென்றும் தப்பறை இன்னதென்றும் எந்த மதம் சம்பந்தமான பாடத்தையும் நாம் எளிதில் கண்டு கொள்ள உதவி புரியும். ஒரு போதனை உண்மையானதாயிருக்க கீழ் காணும் தரங்களுடன் இசைவிணக்கமாயிருக்க வேண்டும், அது:




(1) தன்னில் தானேயும்,

(2) ஒவ்வொரு வேத வசனத்துடனும்,

(3) ஒவ்வொரு வேதாகம கோட்பாட்டு உபதேசத்துடனும்,

(4) தேவனுடைய குணாதிசயத்துடனும்,

(5) மீட்கும் பொருளுடனும்,

(6) நிகழ்வு உண்மைகளுடனும்,

(7) யுகங்களைப் பற்றிய தேவனுடைய ஏற்பாட்டின் நோக்கத்துடனும், இசைவிணக்கமாக இருக்க வேண்டும்.


மெய்யான, உண்மையுள்ள கிறிஸ்தவன் இந்த ஏழு அடிப்படை விதிகளின் உதவியால், தான் ஏற்றுக் கொள்ளும்படி தன்னிடம் அறிமுகப்படுத்தப்படுகிற அநேக தப்பறைகளை உடனடியாக அடையாளங்கண்டுகொள்ள முடியும்.அதனால் அவற்றின் மீது விலைமதிப்புள்ள நேரத்தைச் செலவிட்டு வீணடிக்காமல், அவற்றை ஒதுக்கி எறிந்து விட முடியும்.




தேவனுடைய வார்த்தையையும், சபைக்கும் மற்றும் பொதுவான உலக மனுக்குலத்தாருக்குமுரிய அவருடைய அற்புதமான இரட்சிப்பின் திட்டத்தையும் (தெரிந்தெடுப்பு மற்றும் இலவச கிருபை பற்றிய உபதேசங்களை இசைவுபடுத்துகிறது) புரிந்துக் கொள்வதற்கு அடிப்படை உதவியாக, விசேஷமாக "யுகங்களைப் பற்றிய தெய்வீக ஏற்பாடு" என்று தலைப்பிடப்பட்ட புத்தகத்தை நாங்கள் பரிந்துரைக்கிறோம். இது "சிறந்த விற்பனையாகும் புத்தகமாக" சுமார் 10 மில்லியன் பிரதிகளுக்கும் மேலாக விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இது எளிய நடையில், மார்க்கபேதமற்ற நோக்கு நிலையிலிருந்து எழுதப்பட்டிருக்கிறது. இது திட்டவட்டமாக வேதாகம போதனைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன், அதன் மறைபொருள்களை வெளியாக்கும் உண்மையான வேதாகம திறவுகோலாகவும் இருக்கிறது, மேலும் ஒருவனை புரிந்து கொள்ளுதலுடன், "***சத்திய வசனத்தை பகுத்துப் போதிக்கக்***" கூடியவனாக்குகிறது. நாங்கள் விலை மதிப்புள்ள இந்த புத்தகத்தை வெளியிட்டு, உலகின் எந்த பகுதிக்கும் (ஆன செலவைக் காட்டிலும் மிக குறைந்த விலையில்), வாங்கிய பிறகு விலைக்குரிய பணம் கொடுக்கும்படி அதை அனுப்புகிறோம். முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விலைகொடுக்க முடியாதவர்களுக்கு, வேண்டுகோளின் பேரில் நாங்கள் இலவசமாக வேதாகமத்தைப் படிப்பதற்கான உதவிகளை சந்தோஷமாக அனுப்பி வைப்போம். கர்த்தருக்கு அருமையான எந்த செம்மறி ஆடும், அவருடைய "புல்லுள்ள மேய்ச்சல்" கிடைக்காததினால் பசியுடன் போகக் கூடாது. (சங். 23; பிலி. 4:19). ***

## LHMM - வெளியீடு

- ★ ரசல் போதகர் வெளியிட்ட கவிதைகள்
- ★ பதர் நீக்கப்பட்ட தங்கமயமான தானியங்கள் போன்ற கவிதைகள்
- ★ இயேசுவின் வார்த்தைகள் நிறைந்த கவிதைகள்
- ★ வாக்குத்தத்தங்களை நினைவுபடுத்தும் கவிதைகள்
- ★ சத்தியத்தின் அடிப்படையிலான கவிதைகள்
- ★ கிறிஸ்தவ குணாம்சங்களை வளர்க்க உதவும் கவிதைகள்
- ★ பிரதிஷ்டையில் வளரத் தூண்டும் கவிதைகள்
- ★ ஆறுதல் தரும் கவிதைகள்
- ★ ஆர்வத்தைத் தூண்டும் கவிதைகள்





Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629


**FOR PRIVATE CIRCULATION ONLY**